Registered as a Newspaper

பக்கங்கள் – 16

விலை – ரூபா 50

# உதயன்


சுடர் : 39
கதிர் : 129

புதன்கிழமை
03 ஏப்ரல் 2024

பங்குனி 21 ஆம் நாள்
வள்ளுவர் ஆண்டு 2055

புதன்பொய்கை

முச்சந்தி முரளி



"புதுவிளக்குமாறு புழுதி பறக்கக்கூட்டின மாதிரி இல்லாமல் பொலிஸ்காரர் உந்தக் கண்காணிப்பை தொடர்ந்து காட்டுவினமோ?"

## பொலிஸாருக்கு எதிராக ம.உ.ஆ.குழுவில் முறைப்பாடு!

யாழ்ப்பாணம், ஏப். 3

தெல்லிப்பழைப் பொலிஸாருக்கு எதிராக இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுவில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

கடந்த சில தினங்களுக்கு முன்னர் இடம்பெற்ற தெல்லிப்பழை யூனியன் கல்லூரியின் இல்ல மெய்வல்லுநர் போட்டி நிகழ்வில் இல்லங்கள் அலங்கரிக்கப் 15

## தடைகளைத் தாண்டி

# முருகன், பயஸ், ஜெயக்குமார் இன்று இலங்கை வந்தடைவர்!

**சென்னை, ஏப்ரல் 3**

**இந்தியாவின் முன்னாள் பிரதமர் ராஜீவ்காந்தி கொலை வழக்கில் கைதுசெய்யப்பட்டு, சிறையிலிருந்து கடந்த ஒன்றரை ஆண்டுகளுக்கு முன்னர் விடுவிக்கப்பட்ட முருகன், ரொபேட் பயஸ் மற்றும் ஜெயக்குமார் ஆகியோர் இன்று இலங்கைக்கு அனுப்பப்படவுள்ளனர்.** 15

## குடாநாட்டுப் போக்குவரத்து இனி கழுகுப்பார்வைக்குள்!

### பிரதிப்பொலிஸ்மா அதிபர் அறிவிப்பு



யாழ்ப்பாணம், ஏப். 3

யாழ்ப்பாணக் குடாநாட்டில் இன்றுமுதல் போக்குவரத்து நடைமுறைகள் இறுக்கமாகக் கண்காணிக்கப்படும். அதற்குரிய சிறப்புச் செயற்றிட்டங்கள் முன்னெடுக்கப் 15

## அண்ணாமலைக்கு தேர்தல் காய்ச்சல்!

### யாழ். மீனவர்கள் காரசாரம்



யாழ்ப்பாணம், ஏப். 3

இந்தியாவில், பா.ஜ.க. கட்சியின் தமிழ்நாடு மாநில தலைவர் குப்புசாமி அண்ணாமலைக்கு தேர்தல் காய்ச்சல் வந்துவிட்ட நிலையில், கச்சதீவு தொடர்பில் பிதற்ற ஆரம்பித்துவிட்டார் என யாழ்ப்பாணம் 15

## கச்சதீவை மீட்போம்!

### அண்ணாமலை ஆவேசம்

சென்னை, ஏப். 3

கச்சதீவு விவகாரத்தை நாங்கள் இப்போதுதான் தீவிரப்படுத்தியுள்ளோம். தமிழக பா.ஜ.க.வின் அதிகாரபூர்வ நிலைப்பாடு கச்சதீவு எமக்கு வேண்டும் என்பதே என்று பா.ஜ.க. மாநிலத் தலைவர் அண்ணாமலை தெரிவித்துள்ளார். 15

## ஈஸ்டர் தாக்குதல்; சர்வதேச விசாரணை

கொழும்பு, ஏப். 3

உயிர்த்த ஞாயிறுத் தாக்குதல் சம்பவம் தொடர்பில் விசாரணை நடத்துவதற்காக தேசிய மற்றும் சர்வதேச அங்கத்தவர்களை உள்ளடக்கிய விசாரணை ஆணைக்குழு அமைக்கப்படும். அடுத்த ஜனாதிபதித் தேர்தலில் நான் வெற்றிபெற்று, இரு மாத காலத்துக்குள் இதற்கான நடவடிக்கை எடுக்கப்படும் - என்று எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ தெரிவித்தார். 15

## கிணற்றிலிருந்து சடலம் மீட்பு

வவுனியா, ஏப். 3

வவுனியா, செட்டிகுளம் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட பகுதியில் நேற்றுமுன்தினம் மாலை கிணறொன்றுக்குள் இருந்து சடலம் மீட்கப்பட்டுள்ளது.

சடலம் வவுனியா மாவட்ட மருத்துவமனைக்கு அனுப்பப்பட்டதுடன், 15


### பல்வேறு கோரிக்கைகளை வலியுறுத்தி

## சுகாதாரத்துறையினர் நேற்றுப் போராட்டம்!

யாழ்ப்பாணம், ஏப். 3

நாடளாவிய ரீதியில் உள்ள பல மருத்துவமனைகளில், தாதியர்களும், துணைமருத்துவப் பணியாளர்களும் நேற்றுப் போராட்டத்தில் ஈடுபட்டனர். ஊதிய உயர்வு மேற்கொள்ளப்படவேண்டும், ஊதிய நிலுவை சரிசெய்யப்படவேண் 15






Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உண்மைகளை மறைக்கவே வெளிவருகின்றன புத்தகங்கள்

## கருணா தெரிவிப்பு



**கொழும்பு, ஏப். 3**

**ஈஸ்டர் குண்டுத்தாக்குதல் தொடர்பில் ஆசாத் மௌலானா சிறந்த ஆதாரங்களுடன் நிரூபித்துள்ளார். இந்த நிலையில் முழுப்பூசணிக்காயை சோற்றுக்குள் மறைப்பதற்காக எழுதப்பட்டதாகவே பிள்ளையானால் வெளியிடப்பட்ட புத்தகம் பார்க்கப்படுகிறது.**

- இவ்வாறு தமிழர் ஐக்கிய சுதந்திர முன்னணியின் தலைவரும் முன்னாள் பிரதியமைச்சருமான கருணா என்றழைக்கப்படும் விநாயகமூர்த்தி முரளிதரன் தெரிவித்தார்.

இன்று ஈஸ்டர் குண்டுத்தாக்குதல் தொடர்பாக பல்வேறு விடயங்கள் பேசப்பட்டு வருகின்றன.

முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தனக்கு இது தொடர்பாகத் தெரியும் எனக் கூறுகின்றார். இந்த விடயம் தொடர்பாகப் புத்தகங்கள் வெளிவந்திருக்கின்றன.

குற்றஞ்சாட்டப்பட்டவர்கள் ஏன் புத்தகத்தை வெளியிடவேண்டும் என்கின்ற கேள்வி எழுந்திருக்கின்றது. இதை ஏவியவர்களாலேயே புத்தகம் வெளியிடப்படுகிறது என்றும் அவர் குறிப்பிட்டார். (ச-இ)

## கூலிப்படைகளில் இணைய வேண்டாம்

கொழும்பு, ஏப்.3

சட்டவிரோதமான முறையில் ரஷ்ய அல்லது உக்ரைன் கூலிப் படைகளில் இணையவேண்டாம் என அனைத்து ஆயுதப் படைகளுக்கும் இலங்கைப் பாதுகாப்பு அமைச்சு அறிவித்துள்ளது.

ரஷ்ய கூலிப்படையில் இலங்கையிலுள்ள இராணுவத்தினர் சிலர் இணையவுள்ளனர் என்று தகவல்கள் வெளியாகியுள்ள நிலையில் இதனுடன் பாதுகாப்பு அமைச்சகத்துக்கு எந்தவொரு தொடர்பும் இல்லை என்றும் அமைச்சகம் தெரிவித்துள்ளது.

ரஷ்ய கூலிப்படையில் இணைந்துகொண்ட இலங்கை இராணுவத்தைச் சேர்ந்த இருவர் அண்மையில் உயிரிழந்துள்ளனர் என்று அல் ஜசீரா செய்திச் சேவை தகவல் வெளியிட்டதையடுத்து பெரும் சர்ச்சை ஏற்பட்டுள்ளது. அதேநேரம் இலங்கை இராணுவத்தைச் சேர்ந்த இருவர் உயிரிழந்துள்ளனர் என்று தூதரகங்கள் ஊடாக இலங்கைக்கு அறிவிக்கப்படவில்லை எனவும் அமைச்சு சுட்டிக்காட்டியுள்ளது.

இலங்கை இராணுவத்தினரை ரஷ்யாவுக்கு அனுப்புவதற்கு இரு நாடுகளுக்கிடையில் உடன்பாடு எட்டப்படாத பின்னணியில், இவ்வாறான சம்பவங்கள் நாட்டின் நற்பெயருக்குக் களங்கத்தை ஏற்படுத்தும் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது. இதேவேளை, உக்ரைன் கூலிப்படையில் கடமையாற்றுகையில் இலங்கையின் முன்னாள் இராணுவத் தளபதி உள்ளிட்ட மூவர் உயிரிழந்துள்ளனர் என கடந்த வருடம் டிசெம்பர் மாதம் தகவல் வெளியாகியிருந்தது. (ஏ-இ)

## மருத்துவமனைகளில் பணிப்புறக்கணிப்பு!

கொழும்பு, ஏப்.3

சம்பளப் பிரச்சினையை முன்னிறுத்தி தெரிவுசெய்யப்பட்ட மருத்துவமனைகளில் சுகாதாரத் தொழிற்சங்கங்களது கூட்டமைப்பு நேற்றுமுன்தினம் பணிப்புறக்கணிப்புப் போராட்டத்தை முன்னெடுத்தது.

சம்பளப் பிரச்சினைக்கு உரிய தீர்வை வழங்க அதிகாரிகள் தவறினால் நாளை (இன்று) நாடளாவிய ரீதியில் பணிப்புறக்கணிப்புப் போராட்டம் முன்னெடுக்கப்படும் என்று அந்தக் கூட்டமைப்புத் தெரிவித்துள்ளது. அநுராதபுரம், இரத்தினபுரி, குருநாகல், பதுளை ஆகிய மருத்துவமனைகளில் நேற்று போராட்டம் முன்னெடுக்கப்பட்டது. (ஏ-இ)

## பார்வைக் குறைபாடு சிறுவர்கள் பாதிப்பு



கொழும்பு, ஏப். 3

நாட்டில் பார்வைக் குறைபாட்டால் குழந்தைகள் அதிகமாகப் பாதிக்கப்பட்டு வருகின்றனர் என்று மருத்துவ நிபுணர்கள் தெரிவித்துள்ளனர்.

குழந்தைகள் அதிகநேரத்தை வீட்டுக்குள்ளேயே செலவிடுவதும், தொழில்நுட்பத்துக்கு அடிமையாகி வருவதுமே இதற்கு வழிவகுக்கின்றது. பெரும்பாலான குழந்தைகள் மூக்குக்கண்ணாடி அணிவதுடன், தற்போது லென்ஸ் அணிவதும் அதிகரித்து வருகின்றது. ஒரு குறிப்பிட்ட வயதை அடைந்தவுடன் பார்வைக்கோளாறுகள் அனைத்து விடயங்களிலும் குழந்தைகளுக்கு சவாலாக மாறும் என்றும் மருத்துவ நிபுணர்கள் எச்சரித்துள்ளனர். (ச-இ)

## மது அருந்தும் போட்டியால் உயிரைவிட்ட குடும்பஸ்தர்

கொழும்பு, ஏப்.3

அதிக மது அருந்தும் போட்டி ஒன்றில் பங்கேற்ற ஒருவர் உயிரிழந்துள்ளார். இந்தச் சம்பவம் ஹற்றன், டைன்ஸித் தோட்டத்தில் நடந்துள்ளது.


39 வயதான குடும்பஸ்தர் ஒருவரே உயிரிழந்துள்ளார். இவர் 3 பிள்ளைகளின் தந்தையாவார்.

அண்மையில் அந்தப் பகுதியில் நடந்த ஆலய நிகழ்வொன்றில் சிலர் இந்தப் போட்டியை நடத்தியுள்ளனர். அதில் 3 பேர் பங்கேற்றுள்ளனர். மூவருக்கும் 750 மில்லிலீற்றர் அளவான 3 மதுப்போத்தல்கள் வழங்கப்பட்டுள்ளன. குறுகிய நேரத்தில் மதுபானத்தை அருந்திய குடும்பஸ்தர் வீட்டுக்குச் சென்று வீழ்ந்து படுத்துள்ளார். அதன்பின்னர் எழவில்லை.

இவரது உயிரிழப்புக்கு நிமோனியா நோய் நிலைமை, உணவு சமிபாடு அடையாமை ஆகிய காரணங்கள் உடற்கூற்றுப் பரிசோதனை அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளன.

அதேவேளை, இந்தப் போட்டியில் பங்கேற்ற மற்றொருவரும் பாதிப்புக்குள்ளாகியுள்ள நிலையில் மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுள்ளார். (ஏ)

## முட்டை விலை குறைந்தால் கேக் விலை குறையும்



முட்டையின் விலை 35 ரூபாவாகக் குறைக்கப்பட்டால், ஒரு கிலோ கேக்கின் விலையை 100 ரூபாவால் குறைக்கமுடியும் என்று வெதுப்பக உரிமையாளர் சங்கம் தெரிவித்துள்ளது.

பண்டிகைக் காலத்தில் உள்ளூர் முட்டை ஒன்றை 35 ரூபாவுக்கும் குறைவான விலையில் விற்பனை செய்ய முடியும் என்று விவசாய அமைச்சர் மஹிந்த அமரவீர தெரிவித்திருந்த நிலையிலேயே சங்கம் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளது. (ஏ-இ)



## 'ஏ.ஐ.' திரைப்படம் தயாரிக்க அரசாங்கம் ஆதரவளிக்கும்

### ஜனாதிபதி தெரிவிப்பு

கொழும்பு, ஏப். 3

செயற்கை நுண்ணறிவு (ஏ.ஐ.) தொழில்நுட்பம் இன்று உலகத் திரைப்படத்துறையில் உள்வாங்கப்பட்டிருக்கிறது. அதனை முன்னோக்கிக் கொண்டு செல்லும் வகையில் முதலாவது ஏ.ஐ. திரைப்படத்தை தயாரிப்பதற்கு அரசாங்கம் ஆதரவு வழங்கும் என்று ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க அறிவித்துள்ளார்.

கலைஞர்கள் மற்றும் வடிவமைப்பாளர்களை நவீன தொழில்நுட்ப அறிவுடன் வலுவூட்டுவதற்கு வெளிநாட்டு பயிற்சி வாய்ப்புகள் வழங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

மொரட்டுவப் பல்கலைக்கழகம் மற்றும் கட்புல அரங்காற்றுகைக் கலைகள் பல்கலைக்கழகத்துடன் இணைந்து இலங்கையில் முதலாவது ஏ.ஐ. திரைப்படத்தைத் தயாரிப்பதற்காக முயற்சிகளை ஆரம்பித்துள்ளோம். அதற்கான நிதியை அரசாங்கம் பெற்றுக்கொடுக்கும்.

திரைப்படக் கூட்டுத்தாபனத்தை நவீனப்படுத்தி புதிய பயணத்தைத் தொடர அனைவருக்கும் அழைப்பு விடுக்கிறேன் என்றும் ஜனாதிபதி மேலும் தெரிவித்தார். (ச-இ)

## முல்லைத்தீவையும் அச்சுறுத்தும் வெள்ளை ஈ

முல்லைத்தீவு, ஏப். 3

முல்லைத்தீவு மாவட்டத்தில் தென்னை மரங்களில் வெள்ளை ஈக்களின் தாக்கம் அதிகரித்து வருகின்றது என்று தென்னைச் செய்கையாளர்கள் கவலை தெரிவித்துள்ளனர்.

தற்போதைய வறட்சியான காலநிலையையடுத்து தென்னந்தோப்புகளில் இந்த நோய்த்தாக்கம் வீரியமாகப் பரவிவருகின்றது. இதனால் தென்னஞ்செய்கையாளர்கள் வாழ்வாதாரப் பாதிப்புக்குள்ளாக நேரிடுகிறது.

சந்தைகளில் தேங்காயின் விலை அதிகரித்துள்ளதுடன் அவற்றுக்குத் தட்டுப்பாடும் நிலவிவருகிறது. இதனைக் கட்டுப்படுத்த இதுவரை எந்த கிருமிநாசினிகளும் உரிய அதிகாரிகளால் பரிந்துரை செய்யப்படவில்லை. எனவே அதிகாரிகள் இதுதொடர்பில் கவனஞ்செலுத்தி தென்னைகளை வெள்ளை ஈ தாக்கத்தின் அழிவிலிருந்து பாதுகாக்க உடன் நடவடிக்கை எடுக்கவேண்டும் என்றும் அவர்கள் கோரிக்கை விடுத்தனர். (ச-500)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# அரகலயவில் வெளிநாடுகள்; நாடாளுமன்றக் குழு அவசியம்



## விமல் வீரவன்ஸ கோரிக்கை

**கொழும்பு, ஏப்.3**
**அரகலய காலப்பகுதியில் இலங்கையின் இறையாண்மைக்கு அச்சுறுத்தல் விடுக்கும் வகையில் செயற்பட்ட உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு சக்திகள் தொடர்பில் விசாரணை நடத்தி உண்மையைக் கண்டறிவதற்கு நாடாளுமன்றத் தெரிவுக்குழுவொன்றை அமைக்கவேண்டும் என்று தேசிய சுதந்திர முன்னணியின் தலைவரான நாடாளுமன்ற உறுப்பினர் விமல் வீரவன்ஸ கோரிக்கை விடுத்துள்ளார்.**

நாடாளுமன்றத்தில் சபாநாயகர் மஹிந்த யாப்பா அபேவர்த்தனவிடம் அவர் இந்தக் கோரிக்கையை முன்வைத்தார்.

நம்பிக்கையில்லாப் பிரேரணை மீதான வாக்கெடுப்பின் முடிவில் நீங்கள் (சபாநாயகர்) முக்கியமான தகவலை வெளிப்படுத்தினீர்கள். அரகலய காலப்பகுதியில் அரசமைப்புக்கு அப்பால், ஜனாதிபதிப் பதவியை ஏற்குமாறு உள்நாட்டு, வெளிநாட்டு குழுக்கள் அழுத்தம் கொடுத்தன என்று சுட்டிக்காட்டியிருந்தீர்கள். கோத்தாபய ராஜபக்சவால் எழுதப்பட்ட நூலிலும் தம்மை பதவியில் இருந்து விலகுமாறு உள்நாட்டு, வெளிநாட்டுச் சக்திகள் அழுத்தம் கொடுத்துள்ளமை பற்றி குறிப்பிட்டுள்ளார்.

இதுகுறித்து ஆராய இந்த சபையில் இரு நாள்கள் விவாதம் அவசியம் என்று அவர் குறிப்பிட்டார். (எ-44)

# 13ஆவது திருத்தத்தில் ஜே.வி.பி. இரட்டைநிலை

## பெரமுன தெரிவிப்பு

கொழும்பு, மார்ச் 3
அரசமைப்பின் 13 ஆவது திருத்தச் சட்டம் தொடர்பில் இலங்கையில் ஒரு நிலைப்பாட்டையும், கனடா சென்ற பின்னர் மற்றுமொரு நிலைப்பாட்டையுமே ஜே.வி.பி. கடைப்பிடிக்கின்றது என்று குற்றஞ்சாட்டியுள்ளார் அமைச்சர் பிரசன்ன ரணதுங்க.

ஜே.வி.பி.யினர் 13 ஆவது திருத்தச் சட்டத்துக்கு எதிர்ப்பு. மாகாணசபை முறைமை இரத்துச் செய்யப்பட வேண்டும் என்றெல்லாம் கோஷம் எழுப்பிவிட்டு, கனடா சென்ற பின்னர் வேறொன்றைக் கூறுகின்றனர்.

அரசியல் இலாபமே ஜே.வி.பி.யினரின் அரசியல் நிகழ்ச்சி நிரல் . ஆட்சியைப் பிடிக்கும் அளவுக்கு ஜே.வி.பி. எழுச்சிபெறவில்லை- என்றார். (எ-44)

# வெளிநாட்டு அழுத்தம் மட்டுமே காரணமல்ல!

## விமலுக்கு சபாநாயகர் பதில்

கொழும்பு, ஏப். 3
அரகலய காலப்பகுதியில் வெளிநாட்டு அழுத்தங்களால் மட்டுமே இறையாண்மைக்கு அச்சுறுத்தல் ஏற்பட்டது என்பதை ஏற்க முடியாது என்று சபாநாயகர் மஹிந்த யாப்பா அபேவர்த்தன தெரிவித்துள்ளார்.

நாடாளுமன்றத்தில் நேற்று விமல் வீரவன்ஸவால் விடுக்கப்பட்ட கோரிக்கை தொடர்பில் பதிலளிக்கையிலேயே அவர் இவ்வாறு கூறினார்.

அன்று இறையாண்மைக்கு அச்சுறுத்தல் விடுத்தது எமது நாட்டில் உள்ள இலட்சக்கணக்கான மக்கள் தான். எனவே, நீங்கள் (விமல்) கூறுவதுபோல வெளிநாட்டு அழுத்தங்கள் மூலம் மட்டுமே அது நடந்ததாக எனக்கு தகவல் கிடைக்கவில்லை - என்றார். (எ-44)

# ஈஸ்டர் குண்டுத் தாக்குதல்; முன்கூட்டியே எச்சரித்தேன்



## நீதியமைச்சர் தெரிவிப்பு

கொழும்பு, ஏப். 3
நாட்டில் இரத்த வெள்ளம் ஓடும் செயற்பாடுகளில் 'ஐ.எஸ்.ஐ.எஸ் அமைப்பில் ஒருசில இலங்கையர்கள் பயிற்சி பெற்றுள்ளார்கள். இந்த விடயம் குறித்து அவதானம் செலுத்தவேண்டும் என்று அப்போதைய அரசாங்கத்துக்கு நான் எச்சரித்தபோதும் அதற்கு எதிர்ப்பே கிளம்பியிருந்தது என்று நீதியமைச்சர் விஜயதாஸ ராஜபக்ச நாடாளுமன்றத்தில் நேற்றுமுன்தினம் தெரிவித்தார்.

நான் குறிப்பிட்டதைப் போன்றே குண்டுத்தாக்குதல் நடத்தப்பட்டது. குண்டுத்தாக்குதல் சம்பவத்துக்குப் பின்னர் அப்போதைய அரசாங்கத்தின் முக்கியமான தரப்பினர் அலரி மாளிகையில் ஊடக சந்திப்பை நடத்தி "நடந்தது நடந்துவிட்டது, நாங்கள் என்ன செய்வது?" என்று குறிப்பிட்டார்கள் என்றும் தெரிவித்தார். (ச-இ)

# 'அஸ்வெசும' கொடுப்பனவு மதிப்பீடுகள் விரைவில்

கொழும்பு, ஏப்.3
'அஸ்வெசும' நலன்புரிக் கொடுப்பனவின் இரண்டாம் கட்டத்துக்கான விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ள நிலையில், சுமார் 4 லட்சம் விண்ணப்பங்கள் கிடைக்கும் என்று எதிர்பார்க்கப்படுகின்றது என நிதி இராஜாங்க அமைச்சர் தெரிவித்துள்ளார்.

அதேவேளை, அஸ்வெசும மூலம் வழங்கப்பட்ட பணத்தை எதற்காகச் செலவு செய்கின்றார்கள் என்பது தொடர்பாகவும், அது எதிர்காலத்தை வலுவூட்டும் திட்டத்துக்கு எந்தளவு பங்களிப்புச் செய்கின்றது என்பது தொடர்பாக மதிப்பீடுகள் மேற்கொள்ளப்படும் என்றும் அவர் தெரிவித்துள்ளார். (ஏ-இ)

# பால்மாப் பாவனை உயர்வு

இலங்கையின் மாதாந்த பால்மாப் பாவனை சிறிதளவு அதிகரிப்பைக் கண்டுள்ளது என்று தெரிவிக்கப்படுகின்றது. தற்போது பொருளாதார நிலைமைகள் சிறிதளவு முன்னேற்றமடைந்துள்ள நிலையில், குடும்பங்கள் சந்தைக்குத் திரும்பியுள்ளன என்று சிரேஷ்ட தொழில்துறை பிரதிநிதி ஒருவர் தெரிவித்துள்ளார். (ஏ-இ)

# தினம் தெரியுமோ?

நரியை கொக்கு விருந்துக்கு கூப்பிட்ட கதை தெரியுமெல்லோ. நரி வழக்கமா தட்டையான கோப்பையிலதான் சாப்பிடும், அந்த நினைப்பில கொக்குக்கும் தட்டையான கோப்பையில சாப்பாட்டைக் குடுத்திருக்கு. ஆனால் கொக்கின்ர சொண்டு தட்டையான கோப்பையில சாப்பிட வளமிருக்காது. அதால கொக்கு சாப்பிடாமலே போட்டுதாம். அப்பிடி சாப்பிடுற விதம்கூட ஆளாளுக்கு, இனத்துக்கு இனம், நாட்டுக்கு நாடு வேற வேறயாத்தான் இருக்கும். அதை விளங்கிக் கொள்ளாமல் 'நாங்கள் சாப்பிடுறமாதிரித்தான் நீங்களும் சாப்பிடவேணும்' எண்டு வில்லங்கத்துக்கு ஏதும் திட்டத்தைக் கொண்டுவந்தால், அந்தத் திட்டத்தால ஒரு நன்மையுமில்லை.

இப்ப பள்ளிக்கூடப் பிள்ளையளுக்கு ஒவ்வொரு நாளும் காலைமைச் சாப்பாடு போடுற திட்டத்தில ஒரு மாற்றத்தை அரசாங்கம் கொண்டு வந்திருக்கு. அதின்படி ஒவ்வொரு பிள்ளைக்கும் அரசாங்கம் காலைமைச் சாப்பாட்டுக்கெண்டு 110 ரூபா ஒதுக்கும். அரிசி, பருப்பு, மீன்ரின் எண்டதுகளையும் அரசாங்கமே குடுக்கும். அரிசிக்கு 14 ரூபாவும், பருப்புக்கு 6 ரூபாவும், மீன்ரின்னுக்கு 5 ரூபாவும் எண்ட கணக்கில ஒவ்வொரு பிள்ளைக்கும் ஒதுக்கின 110 ரூபாயில கழிப்பினம். சைவப் பள்ளிக்கூடங்களுக்கு மீன்ரின் குடுக்காததால அவைக்கு அரிசிக்கும், பருப்புக்கும் சேர்த்து 20 ரூபா கழிப்பினம். இப்பிடி அரசாங்கம் குடுக்கிற சாமானுக்கு கழிச்சது போக மிச்சமுள்ள காசிலதான் பள்ளிக்கூடக்காரர் விறகு, கூலி, மரக்கறி, தூள், உப்பு எண்டு எல்லாத்தையும் வாங்கோணும். எண்டாலும் இந்தக் காசில பிள்ளைக்கு சாப்பாடு குடுக்கக்கூடியதாத்தான் இருக்கு.

பொருளாதார நெருக்கடியால கனவீடுகளில் பிள்ளையள் சாப்பிடாமல் போகேக்க இப்பிடிச் சாப்பாடு குடுக்கிறது நல்ல விசயம் தான். ஆனால் தாங்கள் அரிசி தாறதால ஒவ்வொருநாளும் பிள்ளையளுக்கு விடியச் சாப்பாடா சோறுதான் குடுக்க வேணும் எண்டு அரசாங்கம் நிக்குது. சிங்கள ஆக்கள் மூண்டுவேளையும் சோறு சாப்பிடுற பழக்கம் உள்ளவை. ஆனால் தமிழாக்கள் அப்பிடி இல்லையே. அதுவும் விடிய அப்பம், தோசை, இட்டலி, இடியப்பம் எண்டும் மத்தியானம் சோறு கறியெண்டும் இரவுக்கு புட்டு எண்டும் பழக்கப்பட்டுப் போன பரம்பரை நாங்கள். அப்பிடியான தமிழ்ப் பிள்ளையளை பள்ளிக்கூடம் போனவுடன சோத்தைச் சாப்பிடச் சொன்னால் அதுகள் என்ன செய்யும்? நரி வீட்ட விருந்துக்குப் போன கொக்கு மாதிரி முழிச்சுப்போட்டு, சாப்பாட்டை அப்பிடியே வீட்ட கொண்டந்து எறியத்தான் செய்வினம். சத்தான சாப்பாடு எண்டால் சோத்தைவிட்டால் வேற ஒண்டுமே இல்லையோ? இந்த 110 ரூபாவுக்கு கடலை, கௌபி, பால், முட்டை, சத்துமா எண்டு ஒவ்வொரு நாளும் ஒவ்வொரு விதமான சத்தான சாப்பாட்டைக் குடுத்தால் பிள்ளையளும் விரும்பிச் சாப்பிடும், அவைக்கு சத்தாவும் இருக்கும். அதை விட்டிட்டு தங்கட சிங்களப் பிள்ளையளுக்கு சோறுதான் பிடிக்கும் எண்டதுக்காக எங்கட பிள்ளையளுக்கு விடிய வெள்ளனவே சோத்தைத் தீத்தி, சத்தி எடுக்க வைக் கிறதுக்குப் பேர் மாணவர் நலன் திட்டமில்லை. இதுவும் ஒருவகையில அடக்குமுறைதான், நாங்கள் சொல்ற தைத்தான் நீங்கள் சாப்பிடவேணும் எண்டுறது சர்வாதிகாரம்தான்.

பள்ளிக்கூடப் பிள்ளையள் கார்த்திகைப் பூ மாதிரி டெக்கிரேசன் பண்ணினால் உடனபோய் காச்சுமூச்செண்டு கத்திற எங்கட கல்வித்திணைக்களத்து 'ரை' கட்டின ஒப்பிஸர்மார், 'எங்கட பிள்ளையள் விடியச் சோறு சாப்பிடாது. வேற சத்தான சாப்பாடு குடுக்க ஒழுங்கு செய்யுங்கோ' எண்டு அரசாங்கத்தை கேக்கமாட்டினமோ?

-பட்சி
padsi@uthayan.com

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆரம்பப் பாடசாலைகளுக்கு உடற்பயிற்சி ஆசிரியர்கள்

## கல்விச் சமூகம் கோரிக்கை


யாழ்ப்பாணம், ஏப். 3

ஆரம்பப் பாடசாலைகளுக்கான உடற்பயிற்சி ஆசிரியர்களது பதவிநிலை மற்றும் நியமனம் தொடர்பில் நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று கல்விச் சமூகத்தினர் கோரிக்கை முன்வைத்துள்ளனர்.

இதுவரைகாலமும் தரம் ஆறுக்கு மேற்பட்ட பாடசாலைகளுக்கே உடற்பயிற்சி ஆசிரியர் பதவிநிலையும் நியமனங்களும்மேற்கொள்ளப்படுகின்றன. உடற்கல்வி ஆசிரியர்களது நியமனம் இல்லாமையால், ஆரம்ப நிலை மாணவர்கள் உடற்கல்வி துறைசார் பயிற்சிகள் இன்றியுள்ளனர்.

ஆரம்பப்பாடசாலைகளுக்கும் உடற்கல்வி ஆசிரியர் பதவிநிலைகளை உருவாக்கி நியமனங்களை வழங்கநடவடிக்கை மேற்கொள்ளவேண்டும் என்று அவர்கள் கோரிக்கை முன்வைத்துள்ளனர்.

கடந்த வெள்ளிக்கிழமை கடற்றொழில் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவிடமே இவர்கள் இந்தக் கோரிக்கையை முன்வைத்துள்ளனர். இது தொடர்பில் துறைசார் அமைச்சு மற்றும் அதிகாரிகளுடன் கலந்துரையாடி நடவடிக்கை எடுக்கப் படும் என்று அமைச்சர் பதிலளித்துள்ளார். (எ-13)



## நெடுந்தீவில் கடும் வறட்சி

யாழ்ப்பாணம், ஏப்.3

நெடுந்தீவில் கடும் வறட்சி நிலவிவரும் நிலையில் அங்குகுடிதண்ணீருக்குத் தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளது. அங்கு குடிதண்ணீர் விநியோகிக்க வேண்டிய நிலைமை ஏற்பட்டுள்ளது என்று நெடுந்தீவு பிரதேச செயலகம் தெரிவித்துள்ளது.

நெடுந்தீவில் மே, ஜூன் மாதங்களில் குடிதண்ணீருக்குப் பற்றாக்குறை நிலவும். தற்போதைய கடும் வறட்சி மற்றும் குறைந்தளவு மழைவீழ்ச்சி போன்ற காரணங்களால் இந்தமாதமே குடிதண்ணீருக்குப்பற்றாக்குறை ஏற்பட்டுள்ளது. அங்குள்ள குளங்களில் நீர் மட்டம் வற்றிச்செல்வதால் குதிரைகள் உட்பட கால்நடைகள் தண்ணீரின்றி அலைந்து திரிகின்றன என்றும் தெரிவிக்கப்படுகிறது. (ச-17)

# ஈஸ்டர் தாக்குதலுக்கு நீதிகோரிப் போராட்டம்

கொழும்பு, ஏப். 3

உயிர்த்தஞாயிறுதினத் தாக்குதல்களுக்கு நீதிகோரி கல்முனையில் கடந்த ஞாயிற்றுக் கிழமை போராட்டம் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

கல்முனை இருதயநாதர் ஆலயத்துக்கு முன்பாக, உயிர்த்த ஞாயிறு ஆராதனைகள் மற்றும் வழிபாடுகளைத் தொடர்ந்து இந்தப் போராட்டத்தில் பொதுமக்களும் ஆர்வலர்களும் ஈடுபட்டனர். உயிர்த்த ஞாயிறுதின பயங்கரவாதத் தாக்குதல்கள் மேற்கொள்ளப்பட்டுஐந்து ஆண்டுகள்கடக்கப் போகின்றன. ஆனால், இந்தத் தாக்குதலுக்கு நீதியென்பது இன்னமும் எட்டாக்கனியாகவே உள்ளது. எத்தனையோ போராட்டங்கள், வலியுறுத்தல்கள் மேற்கொள்ளப்பட்டுள்ள போதிலும், போராட்டத்தின் சூத்திர தாரி யார் என்று இன்னமும் வெளிப்படுத்தப்படாமையால் பாதிக்கப்பட்ட உறவுகளிடம் ஏமாற்றமே எஞ்சியுள்ளது.

ஆதலால், மக்களினதும் பாதிக்கப்பட்ட உறவுகளினதும் வலியையும், உணர்வுகளையும் புரிந்துகொண்டு விரைவான நீதியொன்றை அரசாங்கம் வழங்கவேண்டும் என்று போராட்டத்தில் ஈடுபட்ட மக்கள் வலியுறுத்தினார்கள். (ம)

## நினைவுப் பகிர்வு

திருநெல்வேலி ஸ்ரீலஸ்ரீ ஞானப்பிரகாச முனிவர், இலக்கிய கலாநிதி பண்டிதமணி சி.கணபதிப்பிள்ளை நினைவுப்பணி மன்றங்கள் இணைந்து முன்னெடுத்த நினைவுப் பகிர்வு நிகழ்வு, திருநெல்வேலி கலாமன்ற சனசமூக நிலையத்தில் கடந்த சனிக்கிழமை நடைபெற்றது.

நிகழ்வில் ஸ்ரீலஸ்ரீ ஞானப்பிரகாச முனிவர் நினைவுப் பகிர்வு, பண்டிதமணி சி.கணபதிப்பிள்ளை நினைவுப் பகிர்வு என்பன இடம்பெற்றன. தொடர்ந்து 'ஸ்ரீலஸ்ரீ ஞானப்பிரகாச முனிவர் வாழ்க்கை வரலாறு' என்ற நூலை பிரம்மஸ்ரீ ச.பத்மநாபன் வெளியிட்டார். (ப)

## 3,000 குடும்பங்கள் வெப்பத்தால் பாதிப்பு

நிலவும் வறட்சியான வெப்பநிலை காரணமாக இலங்கையில் 3 ஆயிரத்து 27 குடும்பங்களைச் சேர்ந்த 10 பேர் பாதிக்கப்பட்டுள்ளனர் என்று தெரிவிக்கப்படுகிறது. வறட்சியால் அதிகம் பாதிக்கப்பட்ட மாவட்டமாக கம்பஹா மாவட்டம் பதிவாகியுள்ளது. அங்கு 7 ஆயிரத்து 53 பேர் பாதிக்கப்பட்டுள்ளனர். இதே வேளை வெப்பமான காலநிலை மே மாதம் வரை நீடிக்கும் என வளிமண்டலவியல் திணைக்களம் எச்சரித்துள்ளது. (ச-இ)

# இன்றைய (ராசிபலன்)

**மேடம்:** உறவுகளால் சங்கடம் ஏற்படக்கூடும். உடல் ஆரோக்கியத்தில் கவனம் தேவை. பிரச்சினைகள் ஏற்படக்கூடும். எதிர்பாராத பொருள்சேர்க்கைக்கு வாய்ப்பு உண்டாகும். எதிர்பார்த்த இலாபம் கிடைக்கும். ஆஞ்சநேயரை வழிபட நன்மைகள் அதிகரிக்கும்.

**இடபம்:** எதிர்பார்த்த பணவரவு கிடைக்கும். பிள்ளைகள் மூலமும் பணவரவுக்கு வாய்ப்பு உண்டு. செலவுகள் ஏற்படும். மற்றவர்களுடன் வீண் விவாதம் செய்வதைத் தவிர்ப்பது நல்லது. உடல்நலனில் கவனம் செலுத்தவும்.

**மிதுனம்:** புதிய முயற்சிகளில் ஈடுபடவேண்டாம். மனதில் இனம் தெரியாத சோர்வு உண்டாகலாம். உடல்நலனில் கவனம் தேவை. பிள்ளைகளால் வீண் செலவுகள் ஏற்படும். குடும்பப் பெரியவர்களிடம் பேசும்போது பொறுமை மிக அவசியம்.

**கடகம்:** சங்கடம் ஏற்படக்கூடும். உடல் ஆரோக்கியத்தில் கவனம் தேவை. உறவினர்களால் சிலருக்கு எதிர்பாராத பொருள்சேர்க்கைக்கு வாய்ப்பு உண்டாகும். உற்சாகமாக இருப்பீர்கள். இலாபம் கிடைக்கும்.

**சிம்மம்:** அதிர்ஷ்டகரமான நாள். புதிய முயற்சி வெற்றிகரமாக நிறைவேறும். தொடங்கிய காரியங்கள் அனுகூலமாக முடியும். பணவரவுக்கும் வாய்ப்பு உண்டு. வியாபாரத்தில் விற்பனையும் இலாபமும் எதிர்பார்த்தபடியே இருக்கும்.

**கன்னி:** சுறுசுறுப்பாகச் செயற்படுவீர்கள். எதிர்பாராத செலவுகள் ஏற்படலாம். எதிரிகள் வகையில் எச்சரிக்கையாக இருக்கவும். பொறுமையைக் கடைப்பிடிக்கவும். வீண் விவாதத்தில் ஈடுபடவேண்டாம்.

**துலாம்:** முக்கியமான முடிவுகள் எதையும் இன்று எடுக்கவேண்டாம். உடல்நலனில் கவனம் தேவை. வியாபாரத்தில் விற்பனை வழக்கம் போலவே நடைபெறும். உங்கள் முயற்சிகளுக்கு ஆதரவு கிடைக்கும். மகிழ்ச்சி அதிகரிக்கும்..

**விருச்சிகம்:** எதிர்பாராத பணவரவுடன், திடீர்ச் செலவுகளும் ஏற்படும். குடும்பத்தினரின் தேவைகளை நிறைவேற்றுவீர்கள். எதிர்பார்த்த உதவி கிடைக்கும். காரியங்களில் சிறுசிறு தடைகள் உண்டாகும்.

**தனுசு:** புதிய முயற்சிகளில் ஈடுபடவேண்டாம். எதிர்பார்க்கும் காரியம் முடிவதில் தாமதம் உண்டாகும். பிள்ளைகளால் தேவையற்ற செலவுகள் ஏற்பட வாய்ப்பு உள்ளது. காரியம் அனுகூலமாக முடியும்.

**மகரம்:** புதிய முயற்சிகளை தொடங்குவது சாதகமாக முடியும். உடல்நலனில் கவனம் தேவை. ஆரோக்கியக்குறைவு ஏற்பட்டு சரியாகும். பேசும்போது வீண் மனவருத்தம் ஏற்பட வாய்ப்பு உள்ளது. பொறுமையைக் கடைப்பிடிக்கவும்.

**கும்பம்:** பொறுமையுடன் இருக்கவேண்டிய நாள். எதிர்பாராத செலவுகளால் கடன் வாங்க நேரிடும். முக்கியமான முடிவுகளை ஒருமுறைக்குப் பலமுறை யோசித்து எடுப்பது நல்லது. வீண் செலவுகள் ஏற்படக்கூடும்.

**மீனம்:** மனதில் தைரியமும் தன்னம்பிக்கையும் அதிகரிக்கும். காரியங்களில் வெற்றி உண்டாகும். எதிர்பார்த்த காரியம் சாதகமாக முடியும். பெருமை உண்டாகும். வியாபாரத்தில் விற்பனையும் இலாபமும் கூடுதலாக இருக்கும்.



# வேலையில்லாத் திண்டாட்டம் நாட்டில் 351,303 பேர் பாதிப்பு

கடந்த 2023 ஆம் ஆண்டின் நான்காம் காலாண்டில், வேலையின்றி இருப்பவர்களின் எண்ணிக்கை 3இலட்சத்து 51 ஆயிரத்து 303 ஆகப் பதிவாகியுள்ளது. மக்கள் தொகைக் கணக்கெடுப்பு மற்றும் புள்ளிவிவரத் திணைக்களம் இதனைத் தெரிவித்துள்ளது.

அதன்படி, கடந்த ஆண்டு ஒக்ரோபர், நவம்பர், டிசெம்பர் ஆகிய மூன்று மாதங்களில் வேலையின்மை விகிதம் 4.3 சதவீதமாகப் பதிவாகியுள்ளது. அதேவேளை கல்வித் தகைமைகளின் படி இந்தக் காலாண்டில் க.பொ.த. உயர்தரத்தில் சித்திபெற்ற ஒரு லட்சத்து 48,092 பேர் வேலையில்லாமல் உள்ளனர் என்றும் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது. (ச-இ)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org



# விவசாயிகளுக்கு மிளகாய் விதை!

மன்னார், ஏப்.3

முசலிப் பிரதேச செயலர் பிரிவில் உள்ள அளக்கட்டுக் கிராமத்தில் மீள்குடியேறியுள்ள விவசாயிகளின் வாழ்வாதாரத்தை மேம்படுத்தும் வகையில் தெரிவு செய்யப்பட்ட 250 விவசாயிகளுக்கு அதியுயர் மிளகாய் உற்பத்திக்கான விதைகள் வழங்கப்பட்டுள்ளன.

இந்த நிகழ்வு கடந்த ஞாயிற்றுக்கிழமை நடைபெற்றது. இந்தியாவின் தனியார் நிறுவனம் ஒன்றின் நிதியுதவியுடன் இவை வழங்கப்பட்டுள்ளன. (எ-56)



# அறநெறி வகுப்புகள் செம்மலையில் ஆரம்பம்

செம்மலை மாணிக்கப் பிள்ளையார் ஆலய அறநெறிப் பாடசாலை பல வருடங்களாக இயங்காதிருந்த நிலையில், ஆலய பரிபாலனசபையினரின் முயற்சியில் மீளவும் கடந்த ஞாயிற்றுக்கிழமை ஆரம்பிக்கப்பட்டது.

ஆலய பரிபாலனசபைத் தலைவர் வினோத் தலைமையில் ஆரம்பிக்கப்பட்ட ஆரம்ப நாள் வகுப்பிலே 77 மாணவர்கள் பங்குபற்றினர்.

நிகழ்வில் முல்லைத்தீவு மாவட்ட இந்து கலாசார உத்தியோகத்தர் மோகனராசா, மாணிக்கப் பிள்ளையார் ஆலயக் குருக்கள் கிருசாந், செம்மலைக் கிராம அலுவலர் பிரபு, ஓய்வு நிலை உதவிக்கல்விப் பணிப்பாளர் ஆரம்பப்பிரிவு அருணாசலம், செம்மலை மகா வித்தியாலய ஆசிரியர் பத்மராசா, அறநெறி ஆசிரியர் மற்றும் ஆலய பரிபாலனசபையினர் ஆகியோரும் கலந்துகொண்டனர். (ப-13)

# கசிப்புக் குகை சுற்றிவளைப்பு

மன்னார், ஏப்.3

மாந்தை மேற்குப் பிரதேச செயலர் பிரிவில் உள்ள காயநகர் கிராமசேவகர் பிரிவில் கசிப்புக் காய்ச்சும் இடம் ஒன்றுகிராம இளைஞர்களால் சுற்றிவளைக்கப்பட்டது. மருதம் விளையாட்டுக் கழக உறுப்பினர்கள் ஒன்றிணைந்து இந்தச் சுற்றிவளைப்பை முன்னெடுத்துள்ளனர். கசிப்பும், கசிப்புக் காய்ச்சப் பயன்படுத்தப்பட்ட பொருள்களும் கைப்பற்றப்பட்டுள்ளன. இருவர் பொலிஸாரால் கைது செய்யப்பட்ட நிலையில், சந்தேக நபர்கள் சிலர் தப்பியோடியுள்ளனர். (எ-56)

# யானை வேலியை முழுமைப்படுத்துக

## தட்டையமலை கிராம மக்கள் கோரிக்கை

**முல்லைத்தீவு, ஏப். 3**

**ஒட்டுசுட்டான், தட்டையமலை கிராமத்துக்குள் யானைகள் வருவதைத் தடுப்பதற்கென உருவாக்கிய யானை வேலிகளை முழுமைப்படுத்தவேண்டும் என்று அந்தப் பகுதி மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.**

தட்டையமலை கிராம மக்கள் யானைகளால் பயிர் அழிவுகளைத் தொடர்ச்சியாகச் சந்தித்த வண்ணம் உள்ளனர். இதனால், ஒட்டுசுட்டான் கமநலசேவை நிலையத்தின் ஏற்பாட்டில் நிறுவனம் ஒன்றின் உதவியுடன் தட்டையமலை கிராமத்தின் மூன்று பக்கங்களும் யானை வேலிகள் அமைக்கப்பட்டன. ஆனால் யானைகள் வருகின்ற ஒரு பக்கம் யானை வேலி அமைக்கப்படாததால் யானைகள் தொடர்ச்சியாக கிராமத்துக்குள் வருகின்றன. யானை வேலிகளை முழுமையாக அமைக்க வேண்டும் என்று ஒட்டுசுட்டான் கமநல சேவை அபிவிருத்தி உத்தியோகத்தரிடம் தொடர்ச்சியாகக் கோரிக்கைகள் விடுத்தும் யானை வேலிகள் அமைக்கப்படவில்லை என மக்கள் விசனம் தெரிவித்துள்ளனர்.

யானை வேலியை முழுமைப்படுத்துவதற்கு ஒட்டுசுட்டான் கமநல சேவை அபிவிருத்தி உத்தியோகத்தர் விரைந்து நடவடிக்கை எடுக்கவேண்டும் என தட்டையமலைக் கிராம மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர். (ப-13)

# விண்ணப்பம் கோரல்

கொடிகாமம், ஏப்.3

தென்மராட்சி கல்வி வலயத்தின் முறைசாராக் கல்விப் பிரிவால் மணப்பெண் அலங்காரம், ஆடையமைத்தல், மின்னிணைப்பு போன்ற பயிற்சிநெறிகளுக்கான போதனாசிரியர்கள் மற்றும் பயிலுநர்கள் ஆகியோரிடம் இருந்து விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.

விண்ணப்பப் படிவங்களை வலய முறைசாராக் கல்விப் பிரிவு அல்லது வலயக் கல்வி அபிவிருத்தி பிரிவு ஆகியவற்றில் பெற்று பூரணப்படுத்தி எதிர்வரும் 8 ஆம் திகதி திங்கட்கிழமைக்கு முன்பாக ஒப்படைக்கவேண்டும் என்று அறிவிக்கப் பட்டுள்ளது. (எ-159)



# சிறுபோகச் செய்கைக்கு முத்தையன்கட்டுக்குள நீர்

முல்லைத்தீவு, ஏப்.3

முத்தையன்கட்டுக் குளம் சிறுபோக நெற்செய்கைக்காக அண்மையில் திறந்து விடப்பட்டுள்ளது.

முல்லைத்தீவு மாவட்டத்தின் பிரதான நீர்ப்பாசனக் குளங்களில் ஒன்றாக முத்தையன்கட்டுக் குளம் காணப்படுகின்றது. முத்தையன்கட்டுக் குளத்தின் கீழான 3 ஆயிரத்து 800 ஏக்கரில், சிறுபோக நெற்செய்கை மேற்கொள்ளப்பட்டு வருகின்றது. அந்தப் பகுதியில் மேற்கொள்ளப்பட்டு வரும் உப உணவுப் பயிர்ச்செய்கைக்காக இந்தக்குளம் தற்போது திறந்து வைக்கப்பட்டுள்ளது.

15 நாள்களுக்கு முன்னர் முத்தையன்கட்டுக் குளத்தின் கீழான வான் பயிர்களுக்கும் கால்நடைகளுக்கும் நீர் தேவை என்ற நிலையில் இந்தக் குளத்திலிருந்து நீர் வழங்கப்பட்டது.

முத்தையன்கட்டு நீர்ப்பாசனப் பொறியியலாளர் பிரிவு, வவுனிக்குளம் நீர்ப்பாசனப் பொறியியலாளர் பிரிவின் குளங்களின் கீழ் கூட்டங்கள் நடைபெற்று, கூட்டத் தீர்மானங்களின் படி குறித்த குளங்களின் நீர், தற்போது சிறுபோக நெற்செய்கைக்காக திறந்து விடப்பட்டுள்ளது. (ப-13)

# செயற்பட்டு மகிழ்வோம் நிகழ்வு

கொடிகாமம், ஏப்.3

போக்கட்டி அ.த.க. பாடசாலையின் செயற்பட்டு மகிழ்வோம் நிகழ்வு அதிபர் தி. அபராஜிதன் தலைமையில், பாடசாலை மைதானத்தில், நாளைமறுதினம் 5 ஆம் திகதி வெள்ளிக்கிழமை பி.ப. 2 மணிக்கு இடம்பெறவுள்ளது.

நிகழ்வில் பிரதம விருந்தினராக யாழ். ஸ்மார்ட் கிங்ஸ் எலக்ரோனிக் பணிப்பாளர் ம.சிந்துஜனும், சிறப்பு விருந்தினராக தென்மராட்சி கல்வி வலய அழகியல் பாட உதவிக் கல்விப் பணிப்பாளரும், வலயப் பிரதிநிதியுமான திருமதி வி.சுனில்ஆரியரட்ணவும், கௌரவவிருந்தினராக தென்மராட்சி கல்வி வலய ஓய்வுநிலை தொழில்வழிகாட்டல் ஆலோசனை அதிகாரி அ.மனோரஞ்சிதனும் கலந்து கொள்ளவுள்ளனர். (எ-159)

# மெய்வன்மை திறனாய்வு

யாழ்ப்பாணம், ஏப்.3

புன்னாலைக்கட்டுவன் சித்திவிநாயகர் வித்தியாலயத்தின் இல்ல மெய்வன்மைத் திறனாய்வும் செயற்பட்டு மகிழ்வோம் நிகழ்வும், பாடசாலை மைதானத்தில் நாளை வியாழக் கிழமை பி.ப. 2 மணிக்கு நடைபெறவுள்ளன.

அதிபர் சி.சிவகுமார் தலைமையில் இடம்பெறவுள்ள நிகழ்வில் வலிகாமம் வலயப் பிரதிக்கல்விப் பணிப்பாளர் சு.ஸ்ரீகுமரன் பிரதமவிருந்தினராகக் கலந்து கொள்ளவுள்ளார். (ப-66)

# திங்கட்கிழமை தொடக்கம் வாகனத் தரிப்பு நடைமுறை

வலி. தெற்குப் பிரதேசசபையின் எல்லைக்குட்பட்ட சுன்னாகம் சந்தியில் இருந்து காங்கேசன்துறை வீதியின் இருமருங்கிலும் ஒற்றை மற்றும் இரட்டை நாள் வாகனத் தரிப்பு அறிவிப்புப் பலகைகள் நடப்பட்டுள்ளன.

சுன்னாகம் பொலிஸாரின் அறிவுறுத்தலுக்கு அமைய, வீதி அபிவிருத்தி அதிகாரசபையின் அனுமதியுடன் இவை நடப்பட்டுள்ளன.

இந்த வாகனத் தரிப்பு நடைமுறை எதிர்வரும் 8ஆம் திகதி திங்கட்கிழமை முதல் நடைமுறைக்கு வரும் என்றும், அதை மீறுவோருக்கு ஆயிரம் ரூபா தண்டம் விதிக்கப்படும் என்றும் அறிவிக்கப்பட்டுள்ளது. (ப-66)

# கூட்டுறவுச் சங்கங்களுக்கு அங்கத்தவர்களை ஈர்க்க!

யாழ்ப்பாணம், ஏப்.3

சர்வதேச கூட்டுறவாளர் தினத்தை முன்னிட்டு யாழ். மாவட்டத்திலுள்ள சகல கூட்டுறவுச் சங்கங்களும் புதிய அங்கத்தவர்களை இணைத்துக்கொள்ளும் ஏற்பாடுகளை மேற்கொள்ளவேண்டும் என்று கூட்டுறவு அபிவிருத்தி உதவி ஆணையாளர் கே. சந்திரசேகரன் தெரிவித்துள்ளார்.

சகல சங்கங்களும் தமது கிளை நிலையங்கள் ஊடாக புதிதாக அங்கத்தவர்களை இணைத்துக்கொள்ளவேண்டும். இதற்கென கிளை நிலையங்களில் விழிப்புணர்வு அறிவுறுத்தல்கள், பொதுச்சபைக் கூட்டங்கள் என்பவற்றை நடத்தவேண்டும்.

அங்கத்தவர்களை கூடுதலாக இணைக்கும் பணியாளர்களுக்கு ஊக்குவிப்பு பரிசுகளை கூட்டுறவாளர் தினத்தில் வழங்கத் தீர்மானிக்கப்பட்டுள்ளது என்றும் கூட்டுறவு அபிவிருத்தி ஆணையாளர் குறிப்பிட்டார். (ச-17)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பாடசாலைமட்ட நிகழ்வுகளில் பொலிஸ் தலையீடு அநாவசியம்

## இலங்கை ஆசிரியர் சங்கம் கடும் கண்டனம்

யாழ்ப்பாணம், ஏப்.3

**பாடசாலை மட்ட நிகழ்வுகளில் பொலிஸார், அரச புலனாய்வாளர், இராணுவத்தினரின் தலையீடுகள் மற்றும் விசாரணைச் செயற்பாடுகளுக்கு இலங்கை ஆசிரியர் சங்கம் கண்டனம் தெரிவித்துள்ளது.**

இதுதொடர்பாக இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுவில் முறைப்பாடு செய்யப்படவுள்ளது என்றும் இலங்கை ஆசிரியர் சங்கம் தெரிவித்துள்ளது.

இலங்கை ஆசிரியர் சங்கத்தின் உப தலைவர் ஆ.தீபன் திலீசன் நேற்று விடுத்துள்ள ஊடக அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:-

பாடசாலைகளில் நடைபெற்று வரும் இல்ல விளையாட்டு நிகழ்வுகளில் அலங்கரிக்கப்படும் செயற்பாடுகள் தொடர்பாக பிரதானமாக வடக்கு, கிழக்கு மாகாணப் பாடசாலைகளில் பொலிஸாரதும், இராணுவத்தினரதும், அரச புலனாய்வாளர்களினதும் அச்சுறுத்தல் இடம்பெற்றுவருவது தனி மனித சிந்தனை மற்றும் மனச்சாட்சி சுதந்திரங்களை நசுக்கும் அடிப்படை மனித உரிமை மீறல்களாகும்.

இலங்கை அரசின் சட்டவரையறைக் குட்பட்டுக் கருத்தியல் ரீதியாகவும், கலை ரீதியாகவும், குறியீட்டு வடிவங்கள் மூலமாகவும் சமூகம் சார் பிரக்ஞைகளை வெளிப்படுத்தும்போது அதை அரச இயந்திரங்களால் நசுக்கும் செயற்பாடுகள் நடைபெறுவதற்கு அனுமதிக்கமுடியாது. இதற்கு கல்வித் திணைக்களங்களும் துணை போகுமானால், கல்விக்குள் இராணுவ மற்றும் பொலிஸ் தலையீடுகளை ஆதரிக்கும் செயற்பாடுகளாகவே இவை அமையும். தெல்லிப்பழை யூனியன் கல்லூரியின் இல்ல மெய்வன்மைப் போட்டியின் இல்ல அலங்காரங்களில் மாணவர்களின் வெளிப்பாடுகள், இலங்கை அரசமைப்பில் ஏற்று அங்கீகரிக்கப்பட்டுள்ள அடிப்படை மனித உரிமைகள் தொடர்பான சிந்தனை மற்றும் மனச்சாட்சி சுதந்திரத் துக்கு உட்பட்டதாகும்.

இந்த விடயங்களில் பொலிஸாருடன் இணைந்து வட மாகாணக் கல்வி அமைச்சும் தலையீடு செய்வதென்பது மாணவர்களின் அடிப்படை உரிமைகளை மீறும் செயற்பாடு என்பதே இலங்கை ஆசிரியர் சங்கத்தின் நிலைப்பாடாகும் - என்றுள்ளது. (எ-66)

## குருபூசையும், சொற்பொழிவும்

தெல்லிப்பழை, ஏப்.3

பன்னாலை திருவருள்மிகு சிவபூதராயர் ஆலயப் பிரதான மண்டபத்தில், சிவநெறிப் பிரகாசர் சமயஜோதி கதிர்காமன் நிஜலிங்கம் ஒழுங்கமைப்பில், வாராந்த பெரியபுராணச் சிறப்புச் சொற்பொழிவு மற்றும் குருபூசை என்பன எதிர்வரும் 5 ஆம் திகதி வெள்ளிக்கிழமை மாலை 4 மணிக்கு இடம்பெறவுள்ளன.

இளஞ்சைவப்புலவர் பிரசங்க வாரிதி ச.நவநீதன் 'சுந்தரமூர்த்தி நாயனாரைத் தனது புத்திரனாகப் பெற்ற நாயனார் ' எனும் தலைப்பில் சொற்பொழிவாற்றவுள்ளார். (ப)

★★★★★

யாழ்ப்பாணம், ஏப். 3

சிவஸ்ரீ பால.திருகுணானந்தக் குருக்களின் வாராந்தப் பெரியபுராணச் சிறப்புச் சொற்பொழிவும், சேக்கிழார் பெருமானின் குருபூசை நிறைவு விழாவும் நாரந்தனை வடக்கு தான்தோன்றி ஸ்ரீ மனோன்மணி அம்பாள் கோவில் பிரதான மண்டபத்தில் எதிர்வரும் ஞாயிற்றுக்கிழமை காலை 9 மணிக்கு நடைபெறவுள்ளன. 'பெரிய புராணச் சிறப்பும் பயனும் ' என்னும் விடயப் பொருளில் பிரசங் கச் சுடர் இளஞ்சைவப்புலவர் க.கயிலைவாசனின் சொற்பொழிவாற்றவுள்ளார். (ப)

## தவறான முடிவெடுத்து குடும்பஸ்தர் உயிரிழப்பு

யாழ்ப்பாணம், ஏப்.3

நோய் நிலைமையைத் தாங்க முடியாது கல்வியங்காட்டைச்சேர்ந்த குடும்பஸ்தர் ஒருவர் தவறான முடிவெடுத்து உயிரிழந்துள்ளார் என்று தெரிவிக்கப்படுகின்றது.

வர் கண் மற்றும் கால் வலியால் பாதிக்கப்பட்டிருந்தார் என்றும், நோய் நிலைமைகளைத் தாங்காது தவறான முடிவெடுத்து உயிரிழந்துள்ளார் என்றும் தெரிவிக்கப்படுகின்றது.

இறப்பு விசாரணைகளை திடீர் இறப்பு விசாரணை அதிகாரி ஆ.ஜெயபாலசிங்கம் மேற்கொண்டார். (எ-27)


## வீடு அமைக்க நிதி சேகரிக்கும் குருந்தூர்மலை விகாராதிபதி!

முல்லைத்தீவு, ஏப்.3

குருந்தூர்மலையில் நீதிமன்ற உத்தரவை மீறிச் சட்டவிரோதமாக அமைக்கப்பட்டுள்ள விகாரையின் விகாராதிபதி, குருந்தூர்மலைக்கு அருகில் உள்ள குமுழமுனை, ஆறுமுகத்தான் கிராமத்தில் தமிழ் குடும்பம் ஒன்றுக்கு வீடமைத்துக் கொடுப்பதற்கு அடிக்கல் நட்டுள்ளார்.

இந்த வீடமைப்புக்கான நிதியைத் தனது பேஸ்புக் கணக்கு ஊடாக விகாராதிபதி பௌத்த மக்களிடம் கோரியுள்ளார்.

குருந்தூர்மலையில் தமிழ் மக்கள் பூர்வீகமாக வழிபட்டு வந்த ஆதிசிவன் ஆலயத்தை அகற்றி அங்கு, நீதிமன்றக் கட்டளையை மீறிச் சட்டவிரோதமாக பௌத்த விகாரை அமைக்கும் நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டுள்ளன. இந்தநிலையில் தமிழ் மக்களின் மனதை மாற்றும் முயற்சிகளில் விகாராதிபதி இறங்கியுள்ளார் என்று தெரிவிக்கப்படுகின்றது. (எ-19)





## சொற்பொழிவு

யாழ்பாணம், ஏப். 3

நல்லூர் வடக்கு ஸ்ரீ சந்திரசேகரப்பிள்ளையார் கோயில் வருடாந்த மஹோற்சவப் பெருந்திருவிழாவை முன்னிட்டு, ஆலயப் பிரதான மண்டபத்தில் சிறப்புச்சொற்பொழிவு நேற்றுமுன்தினம் திங்கட்கிழமை ஆரம்பமாகி நாளைமறுநாள் வெள்ளிக்கிழமை வரை தினமும் இரவு 8 மணிக்கு நடைபெறும். (ப)

## சட்டவிரோத மணலகழ்வு கைதானோருக்குப் பிணை

வடமராட்சி, ஏப்.3

வடமராட்சி கிழக்கு, மருதங்கேணியில் சட்டவிரோத மணல் அகழ்வில் ஈடுபட்ட குற்றச்சாட்டில் கைது செய்யப்பட்ட 6 பேருக்கு பருத்தித்துறை நீதிமன்றம் பிணை அனுமதி வழங்கியது.

கடந்த புதன்கிழமை விசேட அதிரடிப் படையினர் மேற்கொண்ட சுற்றிவளைப்பில் இவர்கள் கைது செய்யப்பட்டனர். 6 உழவியந்திரங்களும் கைப்பற்றப்பட்டன.

இது தொடர்பான வழக்கு பருத்தித்துறை நீதிமன்றில் நேற்றுமுன்தினம் விசாரணைக்கு எடுக்கப்பட்டது. சந்தேகநபர்கள் தலா ஒரு லட்சம் ரூபா பிணையில் செல்ல அனுமதிக்கப்பட்டதுடன், மணல் நீதிமன்றின் பொறுப்பில் எடுக்கப்பட்டது. உழவியந்திரங்கள் விடுவிக்கப்பட்டன. வழக்கு எதிர்வரும் 22 ஆம் திகதிக்கு தவணையிடப்பட்டது. (எ-27)

## தந்தை செல்வாவின் பிறந்ததின நிகழ்வு!

யாழ்ப்பாணம், ஏப்.3

தந்தை செல்வாவின் 126ஆவது பிறந்ததின நிகழ்வு நேற்றுமுன்தினம் காலை தந்தை செல்வா நினைவிடத்தில் தென்னிந்தியத் திருச்சபையின் ஓய்வுபெற்ற பேராயர் ஜெபநேசன் தலைமையில் நடைபெற்றது.

தந்தை செல்வாவின் உருவச் சிலைக்கு மலர். மாலை அணிவிக்கப்பட்டு தந்தை செல்வா சதுக்கத்தில் மலர் தூவி அஞ்சலி செலுத்தப்பட்டது.

நிகழ்வில் நாடாளுமன்ற உறுப்பினர் மாவை சோ.சேனாதிராஜா, வடக்கு மாகாண அவைத் தலைவர் சி.வீ.கே.சிவஞானம், தமிழரசுக் கட்சியின் உபசெயலாளர் குலநாயகம் மற்றும் அரசியல் பிரமுகர்கள், பொதுமக்கள் எனப் பலர் கலந்துகொண்டனர். (எ-27,66)

## உழவியந்திரச் சாரதி வலிப்பு ஏற்பட்டு சாவு

முல்லைத்தீவு, ஏப்.3

உழவியந்திரம் செலுத்திக்கொண்டிருந்தபோது வலிப்பு ஏற்பட்டுக் குடும்பஸ்தர் ஒருவர் உயிரிழந்துள்ளார். இந்தச் சம்பவம் புதுக்குடியிருப்பு, குரவில் பிரதேசத்தில் நேற்றுமுன்தினம் நடந்துள்ளது.

31 வயதுடைய இரு பிள்ளைகளின் தந்தையே இவ்வாறு உயிரிழந்துள்ளார். உழவியந்திரத்தைச் செலுத்திக்கொண்டிருந்தபோது வலிப்பு ஏற்பட்டுக் கீழே வீழ்ந்தபோது அவர் மீது உழவியந்திரம் ஏறியுள்ளது என்று பொலிஸார் தெரிவித்துள்ளனர். [illegible]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


உண்மை - நேர்மை - அஞ்சாமை
உதயன்
மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

## படைப்பாக்கமும் பயங்கரவாதமா?

அதிகாரத்தின் குரூரப்பார்வை இப்போது தமிழ்ப்பாடசாலைகளின் பக்கம் திரும்பியிருக்கிறது. எங்கெல்லாம் உரிமைக்கும், உணர்வுக்குமான குரல்கள் எழத்தொடங்குகின்றனவோ அங்கெல்லாம் நுழைந்து, அந்தக் குரல்களை நசுக்குவதையே ஆட்சியாளர்கள் தமது முதற்கடமையாகக் கொண்டுள்ளார்கள். இல்லாவிட்டால் அந்தக்குரல்களின் பரவுகை பேரெழுச்சியை உண்டாக்கி, தம் இருப்புக்கே உலை வைத்துவிடுமென்பதே ஆட்சியில் உள்ளவர்களின் அச்சமாக இருக்கின்றது. சர்வதேசச் சதியுடன், பெரும் மனிதப்பேரவலத்தை நிகழ்த்தி, குருதிச்சகதிக்கு நடுவே தமிழர்களின் போராட்டம் முடிவுக்கு கொண்டுவரப்பட்ட பின்னரும் சிங்கள-பௌத்த பேரினவாதம் அடங்கிவிடவில்லை. எப்போது வேண்டுமானாலும் அடிபட்ட புலியாக, தமிழர்கள் திரண்டெழுந்து, பழிக்குப் பழி வாங்கக்கூடும் என்ற சந்தேகத்தோடுதான் இன்றுவரை தமிழ் மக்களை இலங்கை அரசும், படைத்தரப்பும் நோக்குகின்றன.

மருண்டவன் கண்ணுக்கு இருண்டதெல்லாம் பேய்போல, சிங்கள-பௌத்த பேரினவாதிகளின் கண்களுக்கு தமிழர்களின் சாதாரண நகர்வுகள்கூட, புலிகளை மீளுருவாக்கும் முயற்சியாகவே புலப்படுகின்றன. அத்தோடு போர் பற்றிய நினைவுகளை அழித்து, கேளிக்கையான பாதைக்குள் இளைய சமுதாயத்தை மடைமாற்றுவதனூடாக, தமிழர்களின் உரிமைப்போரை மலடாக்கிவிடலாம் என்றும் எண்ணுகின்றனர். அதனாலேயே இறுதிப்போர் முடிந்த கையோடு, புலிகள் தொடர்பான அத்தனை நினைவிடங்களையும் படையினர் அத்திபாரத்தோடு பிடுங்கியெறிந்தனர். மாவீரர் துயிலுமில்லங்கள் இடித்தழிக்கப்பட்டன. முள்ளிவாய்க்கால் இனப்படுகொலை, மாவீரர்நாள் என்பவற்றை தங்கள் மன அவசங்களைத் தீர்த்துக்கொள்ளும் ஒரு கருவியாக தமிழர்கள் நினைவேந்த முற்பட்டபோது அவற்றுக்கு ஆயுதமுனையில் தடை விதிக்கப்பட்டது. அதையும் மீறி நினைவேந்தியவர்கள்கைது செய்யப்பட்டனர், வழக்குப் போடப்பட்டு அலைக்கழிக்கப்பட்டனர். தமிழர்களின் உரிமைக்குரல் ஒலிக்கும் யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம் போன்ற இடங்கள் படைப்புலனாய்வாளர்களின் கழுகுப் பார்வைக்குள்24மணித்தியாலங்களும்கொண்டுவரப்பட்டன. அதேசமயத்தில், தமிழர் தாயகத்தில் எப்போதுமில்லாதவகையில் போதைப் பொருள் பாவனை வியாபிக்கத் தொடங்கியது. விநோதமான பெயர்களில் வாள்வெட்டுக் குழுக்கள் உருவாக்கப்பட்டன. சில வருடங்களுக்கு முன்னர் வரை உலக அரங்கில் தலைநிமிர்ந்து நின்ற தமிழ் இளையோர், தறிகெட்டு ஓடும் மந்தைக் கூட்டமாக மாற்றப்படத் தொடங்கினர்.

ஆனால் என்னதான் பேரினவாதிகளும், படைத்தரப்பும் பகீரதப் பிரயத்தனம் செய்து உரிமைக்கான தகிப்பை இல்லாமல் செய்ய முயன்றாலும், தமிழர்களின் மரபணுவில் அது இரண்டறக் கலந்துவிட்டதால், ஏதோவொரு வகையில் பீறிட்டுக்கிளம்பவே செய்தது. இம்முறை பாடசாலை விளையாட்டுப் போட்டிகளில் டாங்கி, வெடுக்குநாறிமலை ஆக்கிரமிப்பு, துயிலுமில்லம், கார்த்திகைப்பூ என்று எங்கள் நிலத்தின் நினைவுகளை மாணவர்கள் ஆக்கவடிவில் வெளிக்கொணர்ந்திருந்தனர். போருக்குள் பிறந்த ஒரு சந்ததி, தான் கண்டு, கேட்டு, உண்டுயிர்த்து, உற்றுணர்ந்து கற்றவற்றை ஓர்ஆக்கவடிவில் வெளிப்படுத்தியதில் தவறொன்றுமில்லையே. ஆனால் பாடசாலைகளில் உயிர்கொல்லும் போதைப் பொருள்கள் விற்பதைக் கண்டும்காணாமல் ஊக்குவித்த அரசாங்கத்துக்கு இந்தப் படைப்புகள் கண்ணைக் குத்தியிருக்கின்றன. பாடசாலை முதல் வீடுவரை விசாரணைகள் நீள்கின்றன. 'குய்யோ முறையோ' என்று சிங்கள-பௌத்த பேரினவாத அமைப்புகள், மாணவர்களின் இந்தப் படைப்பாக்கங்களை பயங்கரவாத முத்திரை குத்தி கடிதங்களை எழுதித் தள்ளுகின்றன. நாட்டில் எத்தனையோ பிரச்சினைகள் இருக்க, ஒன்றுமேயில்லாத இதுபோன்ற மாணவர் படைப்புகளை பிரச்சினையாக்க நினைப்பது அபத்தமே. ஆனால் அதைப் பேரினவாதிகளோ, இலங்கை அரசோ, அரச படைகளோ புரிந்துகொள்ளவே போவதில்லை. அப்படிப் புரிந்துகொள்ளாத வரையில் இந்த நாடு உருப்படவும் போவதில்லை.




# மத்தியவங்கி ஊதிய உயர்வு மீளாய்வு செய்வதற்கு குழு



**கொழும்பு, ஏப். 3**

**அரசாங்க நிதிக் குழுவின் பரிந்துரைகளின் அடிப்படையில் இலங்கை மத்திய வங்கி ஊழியர்களின் சம்பள அதிகரிப்பை மீளாய்வு செய்வதற்காக ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க சுயாதீன ஊதியக் குழுவொன்றை நியமித்துள்ளார்.**

இலங்கை மத்தியவங்கியின் சுயாதீனத்தன்மைக்குப் பாதிப்பு இல்லாத வகையில் பிரச்சினைக்கு நியாயமான தீர்வு காண இந்தக் குழு நியமிக்கப்பட்டுள்ளது எனத் தெரிவிக்கப்படுகிறது.

இந்தக் குழுவால் தீர்வு எட்டப்படும் வரை இலங்கை மத்திய வங்கி சம்பள அதிகரிப்பை ஒத்திவைக்க வேண்டும் என்றும் பரிந்துரைக்கப்பட்டுள்ளது. (ச-இ)

## தேங்காய் விரயத்தில் இலங்கை முதலிடம்!

கொழும்பு, ஏப்.3

உலகில் தேங்காய்களை விரயம் செய்யும் நாடுகளில் இலங்கை முதலிடத்தில் உள்ளது என்று விவசாய அமைச்சர் மஹிந்த அமரவீர தெரிவித்துள்ளார்.

தேங்காய் நுகர்வில் ஏற்படும் விரயத்தைக் குறைப்பதற்கான தொழில்நுட்ப அறிவை மக்களுக்கு வழங்க நடவடிக்கை எடுக்கவேண்டும் என்றும் விவசாய அமைச்சர் குறிப்பிட்டுள்ளார். (எ-இ)

## ஊழல் விசாரணை ஆணைக்குழுவுக்கு புதிய பணிப்பாளர்

கொழும்பு, ஏப்.3

இலஞ்சஊழல்விசாரணை ஆணைக்குழுவின் பணிப்பாளர் நாயகமாக டபிள்யூ. டி.விஜேரத்ன நியமிக்கப்பட்டுள்ளார்.

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவால் இந்த நியமனம் வழங்கப்பட்டுள்ளது. (எ-இ)

## ஞானசாரரின் பிணை மனு நிராகரிப்பு

கொழும்பு, ஏப்.3

கடூழிய சிறைத் தண்டனை விதிக்கப்பட்டுள்ள ஞானசார தேரருக்குப் பிணை வழங்க வேண்டும் என்று முன்வைக்கப்பட்ட கோரிக்கையை கொழும்பு நீதிமன்றம் நிராகரித்துள்ளது.

கொழும்பு மேல் நீதிமன்ற நீதிபதி ஆதித்ய பட்டபெத்திகேவால் இந்தக் கோரிக்கை நிராகரிக்கப்பட்டது. (எ)

# காஸா சிறுவர்களுக்கு 1 மில்லியன் கையளிப்பு

கொழும்பு, ஏப். 3

காஸாவில் இடம்பெறும் மோதல்களினால் பாதிக்கப்பட்ட சிறுவர்களுக்காக இலங்கை அரசாங்கத்தால் ஒரு மில்லியன் அமெரிக்க டொலர் நன்கொடையாக வழங்கப்பட்டுள்ளது.

இதற்கான காசோலை ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவால் இலங்கைக்கான பலஸ்தீன தூதுவரிடம் நேற்றுமுன்தினம் உத்தியோகபூர்வமாக கையளிக்கப்பட்டது.

இதேவேளை காஸா சிறுவர் நிதியத்துக்கு பங்களிக்குமாறு நன்கொடையாளர்களிடம் ஜனாதிபதி அலுவலகம் விடுத்த கோரிக்கைக்கு அமைய, 20 மில்லியன் ரூபா வரை நிதி கிடைத்துள்ளது என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ச-இ)

**நாளை**

04.04.2024
வியாழக்கிழமை
பங்குனி 22
சுபநேரம் : 07.39 - 09.09
ராகுகாலம் : 01.39 - 03.09

**நாளொரு நல்வார்த்தை**

எதிரிகள் தாக்கித் தாக்கி தங்கள் வலுவை இழக்கட்டும். நீங்கள் தாங்கித் தாங்கி வலுவைப் பெற்றுக்கொள்ளுங்கள்.

– அறிஞர் அண்ணா–

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மரண அறிவித்தல்



**தோற்றம்**
**17.12.1948**

**மறைவு**
**01.04.2024**

## சண்முகம் விஜயலட்சுமி

காரைநகர் தன்னை களபூமியை பிறப்பிடமாகவும், மணற்காட்டை வசிப்பிடமாகவும் கொண்ட சண்முகம் விஜயலட்சுமி கடந்த (01.04.2024) திங்கட்கிழமை இறைபதம் அடைந்து விட்டார்.

அன்னார் காலஞ்சென்ற வைத்திலிங்கம் - சுந்தரம்மா தம்பதியரின் பாசமிகு மகளும், காலஞ்சென்ற செல்லையா சண்முகம் அவர்களின் அன்பு மனைவியும், காலஞ்சென்ற செல்லையா - நல்லம்மா தம்பதியரின் மருமகளும், தவயோகேஸ்வரன் (உரிமையாளர், லக்ஷ்மி றேடர்ஸ், யாழ்ப்பாணம்), தவயோகேஸ்வரி (லண்டன்), தவரூபன் (உரிமையாளர், ரூபன் மல்டி றேட் சென்றர், யாழ்ப்பாணம்), தவமலர் (பதுளை), தவக்குமார் (ஆசிரியர், காரைநகர் இந்துக்கல்லூரி) ஆகியோரின் பாசமிகு தாயாரும், இந்திராணி, காலஞ்சென்ற சோமலிங்கம் மற்றும் புனிதவதி, புஷ்பராணி ஆகியோரின் அன்புச் சகோதரியும், சர்வானந்தலிங்கம் (உரிமையாளர், KVK Super Stores, UK), சிவரூபன் (உரிமையாளர் சிவரூபன் ஸ்ரோர்ஸ், பதுளை) ஆகியோரின் அன்பு மாமியும், கனகா, மேனகா, லிங்கா, பதுஷன், தக்ஷன் ஆகியோரின் பாசமிகு பேர்த்தியாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியை அவரின் இல்லத்தில் நாளை (04.04.2024) வியாழக்கிழமை காலை 6 மணிக்கு நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக சாம்பலோடை இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இவ் அறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவருக்கும் அறியத்தருகின்றோம்.

**தகவல்:**
**குடும்பத்தினர்.**
**0773518067**

(CS 0070 A-1)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

> மனம் ஒரு கருவி. அதைக் குறை சொல்வது தவறு. அதை ஆளத் தெரியவில்லை என்பதுதான் சரி.
>
> - ஓஷோ

புதன் பொய்கை

03.04.2024
புதன்கிழமை

ரஜனி பாலசுப்பிரமணியம்
ஆசிரியர்
அச்செழு மெ.மி.த.க.பாடசாலை



# இலங்கையின் கல்விப்போக்கு

உயிர்த்துடிப்பான நற்பண்புள்ள சமூகத்தைக் கட்டியெழுப்புவதற்கு கல்வி மிகவும் அவசியமானதாகும். ஒரு சமூகத்தின் அறியாமை என்னும் இருளைப் போக்கி ஒளியைக் கொடுப்பன பாடசாலைகள். கல்வி என்பது மறைந்திருக்கும் ஆற்றலை வெளிக்கொண்டுவந்து அறிவுச் சுடரை ஏற்றி மனிதனை மனிதனாக வாழ வைப்பது ஆகும். அடங்கி இருக்கும் உள்ளார்ந்த ஆற்றல்களை வெளிக்கொணர்ந்து உடல், ஒழுக்கம், அறிவு, ஆன்மா ஆகியவற்றிலே பூரண விருத்தியை ஏற்படுத்துகின்ற கல்வியே மனித இனத்துக்கு எக்காலத்துக்கும் தேவையான கல்வியாகும்.

**தேசியக்கட்டமைப்பில் கல்வி அடையும் தோல்வி**

அந்த வகையில் இலங்கையின் சமகாலக் கல்விப்போக்கு தொடர்பில் நோக்குவோமாயின், பல்வேறுபட்ட பிரச்சினைகளுடன் நகர்ந்து செல்வதைக் காணக்கூடியதாக உள்ளது. சமகாலத்தில் கல்வியின் போக்கு மற்றும் மாணவர்கள் எதிர்நோக்கும் சவால்கள் என்பன அவசியம் கருத்தில் கொள்ளப்படவேண்டியதொன்றாகும். இலங்கைக் கல்விமுறையானது மனித கௌரவத்தைக் கண்ணியப்படுத்தல் எனும் எண்ணக் கருவுக்குள் அடங்கும் விடயங்களை நடைமுறைப்படுத்துவதில் பின்னடைவைக் காண்கிறது. அதாவது இலங்கையானது பல இன, மத, கலாசார, பண்பாடு ரீதியாக ஒரு பன்மைத் தனமான சமூகத்தைக் கொண்ட ஒரு நாடாகவே உள்ளது. எனினும் அந்தக் கட்டமைப்பை கல்வி மூலம் வெற்றி கொள்ளமுடியாதுள்ளமை கவலைக்குரியதே. தேசிய ஒற்றுமை, தேசிய முழுமை, தேசியப் பிணைப்பு, இணக்கம், சமாதானம், போன்றவற்றை மேம்படுத்துவதற்கும் கல்விக்கு ஊடாக முறையான திட்டங்களை வகுத்து நடைமுறைப்படுத்த வேண்டும். இது இலங்கையின் தேசிய கல்விக் கட்டமைப்பு தற்போது எதிர்கொண்டிருக்கும் ஆகப்பெரும் சவாலே.

**சமமற்ற கல்விப்பகிர்வு**

கல்வியில் சமவாய்ப்பு என்பது எல்லா மாணவர்களும் இன, மத, கலாசார, பொருளாதார வேறுபாடின்றி கல்வி கற்க வாய்ப்பளித்தலாகும். எனினும் இன்றைய காலத்தில் கல்வியில் சம வாய்ப்பு வழங்கப்படுகிறது எனக் கூறப்பட்டாலும் இது நடைமுறையில் சாத்தியப்பாடற்றதாகவே காணப்படுகிறது. பாடசாலை அனுமதியில் கிராம, நகர வேறுபாடு மற்றும் பொருளாதார வசதி என்பன பார்க்கப்படுகிறது. மேலும் பாடசாலைகளும் விருத்தி செய்யப்படுகின்ற போது கிராமப்புறப் பாடசாலைகளை விட நகர்ப் புறப் பாடசாலைகளே அதிகளவில் விருத்தி செய்யப்பட்டு வருகின்றன. இதனால் அதிகமான மாணவர்கள் நகர்ப்புறப் பாடசாலைகளை நாடிச் செல்கின்றனர். இதனால் பின்தங்கிய கிராமப் பாடசாலைகள் பின்தங்கியே காணப்படுகின்றன. காலப்போக்கில் அவை மூடப்படவும் காரணமாகின்றன.

அத்துடன், அண்மைக்காலங்களில் பாடவிதானங்களில் அடைவு மட்டம் குறைவடைந்து செல்வதனைக் காணக்கூடியதாக உள்ளது. பிரதான பாடங்களான தமிழ், கணிதம், ஆங்கிலம், விஞ்ஞானம், வரலாறு போன்ற பாடங்களில் அடைவு மட்டமானது குறைந்த நிலையிலேயே உள்ளமை கவலைக்குரிய விடயமாகும். மேலும் இவ்வாறான பாடங்களை மாணவர்கள் ஆர்வத்துடன் கற்கும் வகையில் பாடத்திட்டத்தில் மாற்றங்களைக் ஏற்படுத்தவேண்டும். பாடசாலைகளுக்கு ஆசிரியர்களை நியமிக்கும்போது சரியான முறையில் வளப்பகிர்வினை மேற்கொள்ளவேண்டும். சில பாடசாலைகளில் பாடங்களுக்கு மேலதிகமாக ஆசிரியர்கள் இருக்கின்ற அதேவேளை மேலும் சில பாடசாலைகளில் ஆசிரியர்கள் இல்லாத நிலையே காணப்படுகின்றது. தொகுதிப் பாடங்களில் தெரிவுகளை மேற்கொள்ளும்போது மாணவர்களுக்கு சிறப்பான வழிகாட்டல்களை வழங்கவேண்டும். அத்துடன்



மாணவர்களின் விருப்பத்துக்கு முக்கியத்துவமளிக்கப்படவேண்டும். பாடசாலைகளில் இருக்கும் ஆசிரியர்களை வைத்து பாடத்தெரிவை மேற்கொள்ளாது மாணவர்களின் எதிர்காலத்தைக் கருத்தில் கொண்டு பாடத்தெரிவை மேற்கொள்ள இடமளிக்கவேண்டும். அல்லது மாணவர்கள் தெரிவுசெய்யும் பாடத்தைக் கற்பதற்கு வழியேற்படுத்திக் கொடுக்கப்படவேண்டும். அடிப்படைத் தேர்ச்சிகளில் சமயமும் ஒழுகலாறும் தொடர்பான தேர்ச்சி காணப்படுகிறது. அதில் நாளாந்த வாழ்க்கையில் ஒழுக்கநெறி, அறநெறி, சமயநெறி தொடர்பான நடத்தைகளைப் பொருத்தமாக மேற்கொள்ளல் தொடர்பாக கூறப்பட்டுள்ளது. எனினும் இன்று பரீட்சையை மையப்படுத்தியே பாடசாலைகளில் சமயம் கற்பிக்கப்படுவதோடு தமது வாழ்வில் நடைமுறையில் எவ்வாறு பின்பற்றப்படுதல்வேண்டும் எனக் கற்பிக்கப்படுதல் குறைவாகவே உள்ளது. அத்துடன் அறநெறி வகுப்புகளுக்குச் செல்வதற்குப் பெற்றோர் பிள்ளைகளுக்கு வழிகாட்டவேண்டும். மேலும் கோயில்களுக்குச் செல்வதற்கு வழிகாட்டப்படவேண்டும். இவ்வாறு சமயக் கல்வியை நடைமுறை வாழ்க்கையில் பிரயோகிப்பதனூடாக நல்லதொரு சமூகத்தைக் கட்டியெழுப்பமுடியும். அடிப்படைத் தேர்ச்சிகளில் ஆளுமை விருத்தி தொடர்பான தேர்ச்சி காணப்படுவதோடு அதில் தீர்மானம் எடுத்தல், பிரச்சினை விடுவித்தல், தற்றுணிவு, விரிந்த சிந்தனை, தனியாள் இடைவினைத் தொடர்பு, நேர்மை, சகிப்புத்தன்மை போன்ற பல விடயங்கள் கூறப்பட்டுள்ளன. இதனைக் கலைத்திட்டத்தில் சரியாகப் புகுத்தப்படவேண்டும். இது சரியான முறையில் புகுத்தப்படாமையால்தான் இன்று பல்வேறு மாணவர்கள் சமூக சவால்களுக்கு முகம் கொடுக்கமுடியாது தற்கொலை, மற்றவரில் தங்கியிருத்தல், ஒற்றுமையின்மை போன்ற நெறிமுறைகளில் வாழ்ந்துகொண்டிருக்கின்றனர்.

**வேலிகள் பயிரை மேயவே கூடாது...**

பாடசாலைகளில் காணப்படும் பாலியல் துன்புறுத்தல்கள் சமகாலக் கல்வியில் பின்னடைவை எதிர்நோக்குகிறது. மாணவர்களை நல்வழிப்படுத்தவேண்டிய கட்டாயத்தில் உள்ள ஆசிரியர்கள் இவ்வாறான கீழ்த்தரமான செயற்பாடுகளில் ஈடுபடுவது ஒருபோதும் ஏற்கமுடியாத விடயமே. கல்வியில் அரசியல் தலையீடுகளை இல்லாது செய்தல்வேண்டும். பாடசாலைகளுக்கு மாணவர்களை சேர்ப்பதிலிருந்து ஆசிரியர்களை நியமிப்பது வரையில் அரசியல் தலையீடுகள் செல்வாக்குச்செலுத்தி வருவதனைக் காணக்கூடியதாக உள்ளது. அரசியல் செல்வாக்கைப் பயன்படுத்தி வசதி படைத்தவர்கள் வசதியான பாடசாலைகளுக்கு சேர்வதும் ஆசிரியர்கள் வீதியோரப் பாடசாலைகளைக் கேட்பதும் எனப் பல செயற்பாடுகள் இடம்பெற்ற வண்ணமேயுள்ளன. அனைத்துப் பாடசாலைகளும் ஒன்றே என்ற 'பணி மனோநிலையின்' பாற்பட்டு ஆசிரியர்களும் அதிபர்களும் செயற்படவேண்டும்.


தலைசிறந்த சிந்தனைப் புரட்சியாளரான ரூஸோ கல்வியில் பல மாற்றங்ளை ஏற்படுத்தினார். 'ஒரு பிள்ளை தன் வாழ்வில் ஒரு போதும் அடையமுடியாத தூரத்திலுள்ள குறிக்கோளுக்காக, அப் பிள்ளையை வருத்திப் பல கட்டுப்பாடுகளுக்குள்ளாக்கி நிலையில்லாத ஓர் எதிர்காலத்திற்காக அந்தப் பிள்ளையின் நிகழ்காலத்தை அர்ப்பணம் செய்யும் கொடூரமான கல்வியை என்னவென்று கூறுவது' என்கின்றார் அவர். அதாவது ஒரு பிள்ளை எந்த இலக்கை அடைய முற்படுகிறதோ அதனைக் கண்டறிந்து அதற்கேற்ப வழிகாட்டி விடுவதே சிறந்த கல்வி என்பதே ரூஸோ வெளிப்படுத்திய கருத்தின் சாராம்சம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# வாசிப்பு மீதான நேசம்தான் எழுத்தாளரை வளப்படுத்தும்

## மூத்த எழுத்தாளர் குலசிங்கம் அறிவுரை



நேர்கண்டவர் : மரியசெல்வம் ஜோய் எந்தனி

ஈழத்து மூலைநகரமான பருத்தித்துறையைப் பிறப்பிடமாகக் கொண்டவர் எழுத்தாளர் தூ.குலசிங்கம். ஈழத்தின் இலக்கியத் துறையிலே தனது முழு ஈடுபாட்டையும் கொடுத்து பெரும்பங்காற்றிய அவர், தன் எழுத்துப் பயணத்தை 'ஆத்மஜோதி' எனும் சஞ்சிகையில் (1967) ஆரம்பித்தார். தொடர்ந்து, அம்மா, ஓசை, மௌனம், வேர்கள், கனவு, மல்லிகை ஆகிய இதழ்களில் கட்டுரைகள் எழுதத் தொடங்கினார். அவருடனான நேர்காணலே இது.

**கே:** இலக்கியப் படைப்புகளில் உங்களுக்கு எவ்வாறு ஆர்வம் ஏற்பட்டது?

**ப:** 'நல்ல கையால் குட்டுப்பட்டால் நல்லது' என்பார்கள். அப்படித்தான் என் எழுத்துப் பயணமும் ஆரம்பித்தது. 1960களில் வெளிவந்த குமுதம் மற்றும் இதர சஞ்சிகைகளில் நான் என் வாசிப்புப் பழக்கத்தை தீவிரப்படுத்தியிருந்தேன். இந்த வாசிப்புப் பழக்கமே என்னை எழுத்துலகுக்குள் அழைத்து வந்தது. 1960ஆம் ஆண்டு வெளிவந்த ஜமுனராணி மீதான வாசிப்பு என்னுள் ஏற்படுத்திய தாக்கங்கள் பல. குமுதம், கல்கி, ஆனந்த விகடன், தாமரை, கணையாழி இவ்வாறான பல சஞ்சிகைகள் எங்களின் இளமைக்காலத்தில் வாசிப்புக்கு ஏற்றனவாக இருந்தன. அவற்றின் மீதான வாசிப்பு ஏற்படுத்திய தவிர்க்கமுடியாத தாக்கமே என்னை இலக்கிய உலகுக்குள்ளும் எழுத்துலகுக்குள்ளும் அழைத்து வந்தது.

**கே:** உங்களின் முதலாவது படைப்பைப்பற்றிக் கூறமுடியுமா?

**ப:** மலையகத்திலிருந்து வெளியான ஆத்மஜோதி என்ற சஞ்சிகையில் என் எழுத்துப் பயணத்தை ஆரம்பித்தேன். 1964ஆம் ஆண்டு எழுதிய அந்தக் கட்டுரையின் தலைப்பு இன்னும் எனக்கு ஞாபகம் இருக்கிறது. 'கால்பந்து விளையாடுபவர்களிடம் கடவுள் இருக்கிறாரே ஒழிய பஜனை செய்பவர்கள் மனதில் கடவுள் இருக்க மாட்டார்' என்று தொடங்கி அந்த கட்டுரை நீண்டு செல்லும். மனிதன் எவ்வாறு வாழ வேண்டும் என்பதை மையப்படுத்தியது.

**கே:** தற்போதைய இலக்கியங்களின் போக்குப் பற்றிய உங்களது கருத்து...?

**ப:** தொடக்க காலத்தில் எல்லாம் நாங்கள் சட்டநாதனுடைய சிறுகதைகள், இலங்கைக் குமரனுடைய காத்திரமான இறுக்கமான கட்டுரைகளை வாசித்து வளர்ந்தோம். சமூகத்தினுடைய வெளிப்பாடாக அந்தப் பதிவுகள் காணப்பட்டன. யதார்த்தத்துக்குப் புறம்பான தன்மையுள்ள கட்டுரைகளை மக்கள் மத்தியில் திணிக்கக் கூடாது. கருத்துக்களைக் கொண்டுசென்று சேர்ப்பதற்கும், திணிப்பதற்கும் மிகப்பெரும் வித்தியாசம் இருக்கவே செய்கின்றன. கோசலை, கபரகொய்யா போன்ற சிறுகதைகளை வாசிக்கும் போது கபரகொய்யா சிறுகதையில் சிங்கள அரசியல்வாதிகளுடைய குணாம்சங்களைப் பார்க்கலாம். கோசலை போராளிகளைப் பற்றிய அற்புதமான சிறுகதை.

**கே:** சாதியம், மதம் போன்ற உணர்வுகளைப் பற்றிய உங்கள் கருத்து...?

**ப:** சாதியமும் மதம் தொடர்பான நிலைப்பாடுகளும் காலம்காலமாக மக்கள் மத்தியில் இருந்துவருவனதான். அதுவொரு பெரிய சிக்கல். சீனாவிலும் சாதி அமைப்புகள் இருக்கின்றன. ஆனால், அவை வலுவானதாக இல்லை. சீனத்து சாதிய அமைப்புகள் பிரதேசங்களைச் சார்ந்ததாக இருக்குமே அன்றி இறுக்கமானதாக உச்சப் பிற்போக்குத்தனங்கள் கொண்டதாக இருக்காது. தமிழர் சமூகத்தில் இருந்த சாதியக் கட்டமைப்பின் பாரதூரத் தன்மை தொடர்பில் பல நாவல்கள் வெளிவந்துள்ளன. 'நூறு பூக்கள் மலரட்டும்' போன்ற படைப்புகள் சாதியத்தின் அக்கிரமத்தைப் படம்பிடித்துக் காட்டுவன.

**கே:** புகைப்படவியலில் ஆர்வம் கொண்டதன் காரணம் என்ன...?

**ப:** புகைப்படத்தில் சாதிக்கவேண்டும் என்ற தேவைகள், எண்ணங்கள் பெரிதாக இல்லை. மனதுக்குள் சில சம்பவங்கள் வருகின்றபோது. அது தானாகவே ஈடுபாடு வந்துவிடுகிறது. என்னை ஒருவரும் இதற்குள் ஈடுபடுத்தவில்லை. எனக்கு பாரதி தான் எல்லாவற்றுக்கும் வழிகாட்டி போல் இருக்கின்றது. இலக்கியம், புகைப்படம் என எல்லாவற்றிலும் ஈடுபாடு இருக்கிறது. நானாக புகைப்படம் எடுக்கமாட்டேன் நடந்து செல்லும்போது என்னை எடு என எது சொல்கின்றதோ அதை எடுப்பேன்.

**கே:** சில வருடங்களாக எழுத்துலகில் இருந்து விலகியிருக்கின்றீர்களே...எதற்காக?

**ப:** உண்மையில் இப்போது நான் வாசிப்பது குறைந்துவிட்டது. ஆனால், பலர் என்னைச் சந்திப்பதற்காகவும், உரையாடுவதற்காகவும் வருகின்றனர். அவர்களுடன் உரையாடவும் அனுபவத்தைப் பகிரவுமே எனக்கு நேரம் சரியாக இருக்கின்றது. உண்மையில் இந்த அனுபவப் பகிர்வில் மிகுந்த மகிழ்வடைகின்றேன். ஆறு வருடங்களாக எழுதுவதை நிறுத்திவிட்டேன். இப்போது, நேர்காணல்கள், ஆலோசனைகள் மற்றும் சந்திப்புகள் மூலம் என் அனுபவத்தைப் பகிர்ந்து வருகின்றேன்.

**கே:** நீங்கள் எழுதிய அகராதி பற்றிக் கூற முடியுமா?

**ப:** நான் எழுதிய அகராதியை முழுமைப்படுத்துவதற்கு எனக்கு எட்டு வருடங்கள் ஆனது. ஆயிரத்து 700 இந்தியச் சொற்களும் அதற்கான விளக்கங்களும் அகராதியில் இருக்கின்றன. இந்திய, இலங்கைச் சொற்களின் அர்த்தங்கள் நிறைந்ததாக அகராதி உள்ளது. இந்தியாவில் பேராசிரியர் ரகுநாதனும் இலங்கையில் நானும் அகராதியைத் தயாரித்தோம். அகராதியை முதலில் இந்தியாவில் தான் வெளியிட்டோம். சிங்கப்பூர் அரசாங்கம் அந்த அகராதியைப் பாடசாலைகளுக்கெல்லாம் விநியோகம் செய்தது. தமிழில் வந்த முதல் பிறெயில் முறையிலான அகராதியும் இதுதான். உதாரணமாக சாதாரணமாக ஒரு பக்கத்தை பிறெயில் எழுத்துக்கு மாற்றும்போது ஏழு பக்கங்கள் தேவைப்படும். அதனுடைய சில பிரதிகளை சுன்னாகத்தில் இருக்கும் வாழ்வகத்துக்குக் கொடுத்துள்ளோம். அமெரிக்காவில் இருக்கும் ஹவாட் பல்கலைக்கழகத்தால் நல்ல அகராதி என அங்கீகாரம் கிடைத்தமையும் குறிப்பிட்டுக்கூற வேண்டியது.

**கே:** இன்றைய எழுத்தாளர்களுக்கு நீங்கள் சொல்ல விரும்புவது?

**ப:** யாரெல்லாம் நன்றாக வாசிக்கின்றார்களோ, யாரெல்லாம் அதிகம் அதிகமாக வாசிக்கின்றார்களோ அவர்கள் நல்ல எழுத்தாற்றல் பெறுவார்கள். எழுத்தாளராகுவதற்கு வாசிப்பு என்பது மிகமிக அவசியமானது. அந்த வாசிப்பை முடிந்த வரைக்கும் நேசிக்க வேண்டும். எழுத்துகளில் கோர்வையை உண்டாக்கவும், கற்பனைத் திறனை வளர்த்தெடுக்கவும் வாசிப்பு மிகமிக அவசியமானது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




# தமிழுடன் உறவாடும் சீனத்துச் செங்கொடி!

சீனாவுக்கும் தமிழர்களுக்கும் இடையிலான தொடர்பென்பது இற்றைக்கு இரண்டாயிரம் ஆண்டுகால பழமையுடையது. சீனர்கள் தமிழ் மீதும் தமிழர்கள் மீதும் அளவில்லா அன்பைக் கொண்டிருந்தனர். சீனாவுக்கும் இந்தியாவுக்கும் அதிலும் குறிப்பாக காஞ்சிபுரத்துக்கும் இடையிலான உறவு இதை நன்றாகவே கட்டியம் செய்கின்றது. வங்காள விரிகுடாவின் வர்த்தகப் பாதையில் காஞ்சிபுரம் மிகவும் முக்கியத்துவம் மிக்கதாகவே அமைந்துள்ளது. தென்னிந்தியாவின் கதவு என்றே இந்த நகரம் ஆதிகாலத்தில் அழைக்கப்பட்டது. இந்தியாவுடனான சீனர்களின் உறவுகள் பலப்படுவதற்கான கேந்திர இடமாகவும் காஞ்சிபுரமே காணப்பட்டது.

சீன தேசத்தின் டாங் வம்சம் முதல், யிஜிங் என்ற துறவி வரை பலரும் இந்தியாவுக்குப் பயணம் செய்ததை ஆவணங்கள் மற்றும் தொன்மங்கள் துல்லியமாகக் காண்பிக்கின்றன. சீனத் துறவிகள் கல்வி கற்பதற்காக அடிக்கடி இந்தியாவுக்குச் சென்று வந்துள்ளனர். இவர்கள் பௌத்த மதம் தொடர்பான கருத்துகளை சீனாவில் புத்தகங்கள் வாயிலாக நிறுவினார்கள். இவர்களது பயணம் தொடர்பான தகவல்களும் சீனாவில் காணப்படுகின்றன. சீனாவின் இந்தியாவுடனான தொன்றுதொட்ட பண்பாடும், தொடர்பும் இன்றும் பேணப்படுகின்றது.



சீனாவில் இருந்து தமிழ்மொழி கற்கும் ஆர்வத்துடன் பல்லாயிரம் மாணவர்கள் இன்றும் சென்றுகொண்டிருக்கின்றனர். தமிழ்மொழியில் மட்டுமல்ல, தமிழ்நாட்டு கலைகள், கலாசாரங்கள் மற்றும் உணவுப் பழக்கவழக்கங்களில்கூட பெருநாட்டம் கொண்டவர்களாகவே அவர்கள் காணப்படுகின்றனர். இன்றும் சீனாவின் யுனான் மின்சு பல்கலைக்கழகத்தில் இடம்பெறும் பண்பாட்டுவிழாவின்போது தமிழ்த்துறை மாணவர்கள் சேலைகளை அணிந்து, தமிழ்நாட்டு உணவுகளை பரிமாறி, தமிழ் பண்பாடுகளை முன்னெடுப்பதில் ஆர்வத்துடன் செயற்பட்டு வருகின்றனர்.



மட்டுமல்லாமல், சீன மாணவர்கள் அதிக அளவிலான தமிழ் நூல்களை தேடிக் கற்பதில் ஆர்வம்காட்டி வருகின்றனர். குறிப்பாக யுனான் மின்சு பல்கலைக்கழகத்தில் நிறைமதி என்னும் பெயர் கொண்ட சீன ஆசிரியை தமிழ்த் துறைத் தலைவராக இருக்கின்றார். இந்தப் பல்கலைக்கழகத்தில் கற்பிக்கும் விரிவுரையாளர்கள் அடிப்படைத் தமிழ், பேச்சுத் தமிழ், இலக்கணத் தமிழ் முதலான பாடங்களைக் கற்பித்துக் கொடுக்கின்றார்கள். தமிழ்ப் பாடல்களைப் பாடுவது அவற்றை காணொலிகளாகப் பதிவுசெய்வது போன்ற செயற்பாடுகளும் இடம்பெறுகின்றன. மாணவர்கள் பிரயோக ரீதியான பயிற்சிகளை பெறும் பொருட்டு இரண்டாம் ஆண்டின் முடிவில் ஒரு வருடம் இலங்கை, இந்தியா ஆகிய நாடுகளுக்கு கற்க செல்வது வழமை. தமிழ்மொழி கற்பதனால் தமிழ் மக்களின் கலாசாரத்தை உணர்ந்தறிந்து கொள்ளமுடியும் என்பதும், எதிர்காலத்தில் சீன தமிழ் உறவை கலாசார ரீதியாகப் பேண முடியும் என்பதும் யுனான் மின்சு பல்கலைக்கழக மாணவர்களின் நம்பிக்கையும் பெருவிருப்புமாகும்.

**தியான் ஹவாலி**
*தமிழ்த் துறை*
*சீன யுனான் மின்சு பல்கலை*





## வாழ்வில் வெற்றி வசப்படும்

வாழ்க்கை என்பது போராட்டம் அதனால்
வந்திடும் வெற்றித் தேரோட்டம்
ஆழ்மன முயற்சி கடைத்தேற்றம் அது
ஆக்கிடும் செயலில் மடைமாற்றம்!
ஆளுமை வளர்த்தால் உத்வேகம்
நாளும் பொழுதும் சிந்திப்போம்தடைகளை
நாமே உடைத்து வென்றிடுவோம்!

சோதனை வந்தால் சாதனையே மகிழ்ச்சி
சுகங்களின் ஆழ்மன ராகங்களே!
வேதனை வலிகள் நமை உலர்த்தும் வெற்றி
வெளிச்சமாகும் விடியல்களே!
போதனை என்பது சுலோகங்களே நம்மைப்
போற்றி வளர்த்திடும் வாழ்வினிலே!
ஆதவன்போலே ஒளித்து என்றும்
ஆர்வமுடன் உரைத்திடுவோம்!

ஆற்றல் என்பது மாசக்தி நம்முள்
அணையா விளக்கம் பெரும்சக்தி நாற்று
நட்டால் செடிவளரும்மனதில்
நல்லன விதைத்தால் அரிவாகும்!
நூற்றால் பஞ்சு நூலாகும் உள்ளம்
உண்மை என்றால் வாழ்வோங்கும்!
மாற்றம் வருவன வரவேற்போம்வெற்றி
வாழ்வில் வசப்படச் செயற்படுவோம்!!!

**நா.ஸ்ரீகிருஷ்ணா**

## தாய் மடி

தவமிருந்தும் கிடைக்காத
அரியணை தன்னலமற்ற
கண்ணியத்தின்
துளிர்ப்பு

தாய்மையின் தரிசு நிலம்
தர்மம் சுமக்கும் சிம்மாசனம்

விடுதலை வீரனின்
வித்து விலையில்லாக்
கருணையின் ஊற்று...

அன்பின் அகல்விளக்கு
ஆளுமையின்
திறவுகோல்
இலட்சியவாதியின்
இலக்கு...



**க.நாகேஸ்வரா**
சண்டிலிப்பாய்

புதன்பொய்கைக்கு
நீங்களும் எழுதலாம்
0773165555
puthanpoikaiuthayan@gmail.com

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இலக்கியங்களில் ஊடுருவும் கல்வியின் சிறப்பியல்

■ இராமபுரத்தூர் நிஷாந்தன்

மனித வாழ்வியலில் படிமுறைகளில் முக்கியத்துவம் பெற்று விளங்குவது கல்வியாகும். ஒருவனுக்கு அவன் வாழும் வாழ்க்கையின் சிறப்புக்கு வழி வகுப்பது கல்வியாகும். கல்வியாலேயே இந்த உலகம் சிறப்புறுகின்றது என்கின்றன எமது இலக்கியங்கள். இளமையில் கல்வி சிலையில் எழுத்து என்பர். அதற்கமைய இளமை முதலே கல்வியை கற்றுக் கொள்கின்றோம். அந்தக் கல்வியினால் நம் அறிவாற்றலை வளர்த்துக் கொள்கின்றோம். இத்தகு கல்வியின் சிறப்பினையும் மேன்மையினையும் எமது இலக்கியங்கள் மற்றும் நீதி நூல்கள் அழகுற எடுத்துரைத்துள்ளன. அத்தகு தன்மைகளை இங்கு நோக்குதல் சிறப்புடையதாகும்.



பிச்சை எடுத்தாயினும் கல்வியைக் கற்றிட வேண்டும் என இனியவை நாற்பது கூறுவது போல நிறைவான கல்வியை நாம் பெற்றிட வேண்டும். நம் மாணவர்களையும் முழுமையான கல்வி அறிவினைப் பெற்றிட வழி செய்திட வேண்டும்.

### திருக்குறளில் கல்வி

உலகப் பொதுமறையாகிய திருக்குறளில் கல்வியின் சிறப்பை கூறிடவே கல்வி எனும் அதிகாரத்தை வைத்துள்ளார் வள்ளுவர். ஒருவனுக்கு அவனது வாழ்விலே கல்வி ஒன்றே அழிவற்ற செல்வமாகும். மற்றுயவை எல்லாம் செல்வங்களே இல்லை என்கின்றார் வள்ளுவர். இதனை,

**"கேடில் விழுச்செல்வம் கல்வி ஒருவர்க்கு**
**மாடல்ல மற்ற யவை"**

எனும் குறள் புலப்படுத்துகின்றது.

மேலும், கல்வி கற்றவர்களே தம் முகத்தில் இரண்டு கண்களைக் கொண்டிருப்பவர்கள் எனப்படுவர். கல்வி கல்லாதவரோ தம் முகத்தில் இரண்டு புண்களைக் கொண்டிருப்பவர்களாவர் என்கின்றார் வள்ளுவர்.

**"கண்ணுடையர் என்பவர் கற்றோர் முகத்திரண்டு**
**புண்ணுடையர் கல்லாதவர்"**

அதாவது கல்லாதவர் முகத்தில் கண்கள் இருந்தும் அதில் யாதொரு பயனும் இல்லை என்பதே வள்ளுவர் கருத்தாகும். ஒருவன் தன் ஒரு பிறப்பில் கற்ற கல்வியானது அவனது ஏழு பிறப்பிற்கும் துணையாக அமையுமாம் என்கின்றார் பொய்யா மொழியார். இதனை

**"ஒருமைக்கண் தான்கற்ற கல்வி ஒருவற்கு**
**எழுமையும் ஏமாப்புடைத்து"**

எனும் குறள் மூலம் காண முடிகின்றது. ஒரு பிறப்பில் கற்ற கல்வி அறிவானது ஒருவனது ஏழு பிறவிக்கும் மறந்திடமால் நீக்கமற நிறைந்திருக்குமாம். ஆக, கல்வியின் சிறப்பிற்கு வள்ளுவர் தரும் விளக்கத்தினை இவ்வாறு கண்டு கொள்ளமுடிகின்றதல்லவா?

### நாலடியார் கூறும் கல்வியின் மேன்மை

நான்கு அடிகளில் நீதிக் கருத்துகளை கூறிடும் அற நூலாகிய நாலடியார் கூட கல்வியின் சிறப்பினை பின் வருமாறு உரைக்கின்றது.

**"குஞ்சி யழகும் கொடுந்தானைக் கோட்டழகும்**
**மஞ்சள் அழகும் அழகல்ல - நெஞ்சத்து**
**நல்லம் யாம் என்னும் நடுவு நிலைமையால்**
**கல்வி அழகே அழகு"**

அதாவது, கூந்தலை ஒழுங்குபடுத்தி முடிப்பதால் வரும் அழகும், முந்தானையில் கரையிட்ட அழகும், மஞ்சள் பூசுவதால் வரும் அழகும் உண்மையான அழகல்ல. மனதளவில் உண்மையாக நடந்து கொள்கின்றோம் என்கின்ற நடு நிலைமையான ஒழுக்கத்தினை கற்றுத் தரும் கல்வி அழகே உண்மையான அழகாகும். ஒருவர் அழகுடையவர் என்றாலும் அவர் கல்லாதவராயின் அவர் அழகில் யாதொரு பயனும் இல்லை என்பது நாலடியார் தரும் கருத்தாகும்.

மேலும், கல்வி ஒருவனுக்கு இவ்வுலக இன்பத்தைத் தரும், பிறருக்குத் தருவதால் குறையாதது, கற்றவர் புகழை எங்கும் பரவச் செய்திடும், உயிரோடு இருக்கும் வரை அழியாது, ஆகவே எந்த உலகத்திலும் கல்வியைப் போன்றதொரு அறியாமையைப் போக்கும் மருந்து வேறில்லை என்கின்றது நாலடியார், இதனை,

**"இம்மை பயக்குமால் ஈயக் குறைவின்றால்**
**தம்மை விளக்கு மால் தாமுளராக் கேடின்றால்**
**எம்மை யுலகத்தும் யாம் காணோம் கல்வி போல்**
**மம்மர் அறுக்கும் மருந்து"**

எனப் பாடல் தெளிவுறுத்துகின்றது.

இதுதவிர, கல்வி ஒருவர் மனத்திலிருந்து பிறரால் கவர்ந்து செல்ல முடியாதது, அது போல பிறருக்கு கொடுத்தாலும் குறையாதது, மேலான படை வலிமை கொண்ட அரசனாலும் கவர்ந்து கொள்ள முடியாதது, ஆதலால் ஒருவன் செல்வம் எனச் சேர்த்து வைக்கக் கூடியது கல்வி ஒன்றேயாகும் எனக் கல்வியின் சிறப்பதனை அழகுறக் காப்பியம் செய்கின்றது சமணமுனிவர் தந்த நாலடியார்.

### மூதுரை கூறும் கல்வியின் மாண்பு

ஔவையார் தந்த மூதுரை அரிய பல நீதிக் கருத்துகளை கூறுவது. வாக்குண்டாம் எனும் மறுபெயரால் அறியப்படுவது. இந்த நூலிலும் கல்வியின் சிறப்பது பயிலப்பட்டுள்ளது.

**"கான மயில் ஆடக் கண்டிருந்த வான் கோழி**
**தானும் அதுவாக பாவித்துத் தானும் தன்**
**பொல்லாச் சிறகை விரித்து ஆடினாற் போலும்**
**கல்லாதான் கற்ற கவி"**

காட்டில் மயில் ஒன்று தோகை விரித்து நடனம் ஆடியதைப் பார்த்த வான்கோழி ஒன்று தன்னையும் மயிலைப் போலவே நினைத்து தன் அழகில்லாத சிறகினை விரித்து நடனம் ஆடியதாம். இதைப் போலவே கல்வி கற்காத ஒருவன் கவிதையோ அல்லது ஒரு விடையத்தையோ சொல்ல முற்படுவதால் யாதொரு பயனும் இல்லையாம். ஆக, வான்கோழி தோகை விரித்து ஆடினும் மயிலுக்கு இணையாகாது. அதுபோலவே கல்லாதவர் கவிதை பாடினாலும் அது கற்றவர் தன்மைக்கு இணையாகாது என்கின்றார் ஔவையார். குளத்தினில் மலர்ந்திருக்கும் தாமரை மலரினை அன்னப் பறவை சேர்ந்திருப்பது போல கற்றவர்கள் கற்றவர்களையே விரும்பிச் சேர்ந்திருப்பர். சுடுகாட்டில் உள்ள பிணத்தினைக் காகம் சேர்ந்திருப்பதைப் போல கல்வி அறிவில்லாத மூடர்கள் அறிவில்லாத மூடர்களையே எப்போதும் சேர்ந்திருப்பர். இதனை

**"நற்றாமரைக் கயத்தில் நல் அன்னம் சேர்ந்தாற்போல்**
**கற்றாரைக் கற்றாரே காமுறுவர் - கற்பிலா**
**மூர்க்கரை மூர்க்கரே முகப்பர் முதுகாட்டில்**
**காக்கை உகக்கும் பிணம்"**

எனும் பாடல் தெளிவுறுத்துகின்றன"

### பழமொழி நானூறில் கல்வியின் சிறப்பு

மனித வாழ்வியல் பயன்பாட்டில் பயிலப்பட்டு வருகின்ற பழமொழிகள் ஒவ்வொன்றையும் ஒவ்வொரு பாடலில் வைத்து தொகுக்கப்பட்டதே இந்த நூலகும். இதில்கூட கல்வியின் பெருமை பேசப்படுகின்றது. பாடல் இதுவே,

**"ஆற்றவும் கற்றவும் அறிவுடையார்; அஃதுடையார்**
**நாற்றிசையும் செல்லாத நாடில்லை - அந்நாடு**
**வேற்று நாடாகர் தமவேயாம் ஆயினால்**
**ஆற்றுணா வேண்டுவதில்""**

அதாவது, மிகுதியாகக் கற்க வேண்டிய நூல்களைக் கற்றவர்களே சிறந்த அறிவுடையவர் எனப்படுவர். அவ்வறிவு உடையவர்களது புகழ் நான்கு திசைகளிலும் பரவாத நாடுகளில்லை. அந் நாடுகள் எதுவும் அயல் நாடுகளாகாது. அவ்வறிவுடையோரது நாடுகளேயாகும். கற்றோனுக்குச் சென்ற இடமெல்லாம் சிறப்பு என்பதே இதன் கருத்தாடலாகும்.

இதையும் காணுங்கள், பாம்புகளின் கால்களை அந்தப் பாம்பு இனத்தின் ஏனைய பாம்புகளே அறியும் தன்மையுடையன. அதுபோல அறிவில் சிறந்த கல்வியுடையவர்களை, நிரம்பிய கல்வியறிவு உடையவர்களே அறிந்து கொள்வர். அது அறிவில்லாதவர்களால் இயலாததாகும்.

### கல்வியே மனிதர்க்கு வாழ்வளிக்கும் அருமருந்து

பிச்சை எடுத்தாயினும் கல்வியைக் கற்றிட வேண்டும் என இனியவை நாற்பது கூறுவது போல நிறைவான கல்வியை நாம் பெற்றிட வேண்டும். நம் மாணவர்களையும் முழுமையான கல்வி அறிவினைப் பெற்றிட வழி செய்திடவேண்டும்.

மேலும், அறிவினைத் தரும் நூல்களை எப்போதும் வயது பாகுபாடின்றி கற்றிடல் நன்றே. ஏனெனில் கல்வியின் துணை கொண்டே நாம் இனி வாழ்ந்திடல் இயலும். ■

## சடமாக்கியதோ தேன்மழயில்...

நீதிக்காய்த் துடிக்காத நெடிதாளும் சப்பிகளே
சாதித்ததென்ன கட்டடங்களோ...? போதித்த
ஆன்மீகமும் அரசியலும் சடமாக்கியந்தனை
வான்மடியில் கிடத்தியதோ சாந்தா!

கட்டுவதும் இடிப்பதும் கொட்டுவதும் நமக்கு
பட்டுவாடா செய்வதே வேலை ஒட்டியதாம்
மண்ணுக்காய் தம்மையீந்த குடும்பங்களை வாழ்விக்க
எண்ணிய கரங்களுண்டோ? (சொல்)




சிவானந்தராஜா

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சொந்த மைதானத்தில் பம்மியது பெங்களூர்!

## லக்னோ எழுச்சி வெற்றி



பெங்களூர், ஏப். 3

**ஐ.பி.எல். தொடரில் நேற்று நடைபெற்ற ஆட்டத்தில், சொந்த மைதானத்தில் லக்னோவிடம் படுதோல்வி அடைந்தது பெங்களூர்.**

நாணயச் சுழற்சியில் வெற்றிபெற்ற பெங்களூர் றோயல் சலஞ்சர்ஸ் அணியினர் முதலில் களத்தடுப்பைத் தீர்மானித்தனர். குயின்டன் மற்றும் ராகுல் இணைந்து வலுவான ஆரம்பத்தை லக்னோவுக்கு அமைத்துக் கொடுத்தனர். ஐந்தே ஓவர்களில் 50 ஓட்டங்களைக் கண்டது லக்னோ. 20 ஓட்டங்களுடன் ராகுல் ஆட்டமிழந்த பின்னர், படிக்கல் சற்றுத் தடுமாறினார். அவர் 11 பந்துகளில் 6 ஓட்டங்களை மட்டுமே பெற்றதால் லக்னோவின் ஓட்டச் சராசரியில் அது தாக்கத்தை ஏற்படுத்தியது.

மறுமுனையில் அபாரமாக விளையாடிக் கொண்டிருந்த குயின்டன் டி ஹொக்குடன், ஸ்ரொய்னிஸும் இணைய லக்னோவின் ஓட்டக்குவிப்பு மேலும் உச்சம் கண்டது. குயின்டன் அரைச்சதம் கடந்து 81 ஓட்டங்களுடன் ஆட்டமிழந்தார். இறுதி 10 பந்துகளில் ஐந்து சிக்சர்களைப் பறக்கவிட்டார் பூரன். முடிவில் 5 விக்கெட்களை இழந்து 181 ஓட்டங்களை லக்னோ குவித்தது. பூரன் 21 பந்துகளில் 40 ஓட்டங்களுடன் ஆட்டமிழக்காதிருந்தார்.

பந்துவீச்சில் மக்ஸ்வெல் 2 இலக்குகளைக் கைப்பற்றினார்.

பதிலுக்குக் களமிறங்கிய பெங்களூர் அணிக்கு ஆரம்ப வீரர்களான டுபிளெஸி 19 ஓட்டங்களுடனும், கோலி 22 ஓட்டங்களுடனும் ஆட்டமிழந்து தடுமாற்றத்தையே வெளிப்படுத்தினார்கள். படிதார் 29 ஓட்டங்களைப் பெற்றாலும் 21 பந்துகளை எதிர்கொண்டார். 180க்கும் மேலான ஓட்டம் வெற்றிக்காகப் பெறவேண்டியிருக்கையில் படிதாரின் ஆட்டம் பின்னடைவாகவே அமைந்தது. மக்ஸ்வெல் ஓட்டமெதையும் பெறாது ஆட்டமிழந்தார். 13 பந்துகளில் 33 ஓட்டங்களை லம்ரோர் குவித்து நம்பிக்கையை ஏற்படுத்தினாலும் மறுமுனையால் விக்கெட்கள் சரிந்தன. முடிவில் 153 ஓட்டங்களில் பெங்களூர் அணி அனைத்து விக்கெட்களையும் இழந்தது. 28 ஓட்டங்களால் லக்னோ வெற்றிபெற்றது.

பந்துவீச்சில் மயங்க் யாதவ் 3 விக்கெட்களைக் கைப்பற்றினார். (ம)

## இல்ல மெய்வன்மை

கொடிகாமம் ஏப். 3

உசன் இராமநாதன் மகா வித்தியாலயத்தின் வருடாந்த இல்ல மெய்வன்மைப் போட்டி இன்று புதன்கிழமை பிற்பகல் பிற்பகல் 2 மணிக்கு பாடசாலை விளையாட்டு மைதானத்தில் அதிபர் க.உமாபாலன் தலைமையில் இடம்பெறவுள்ளது.

இந்த நிகழ்வில் பிரதம விருந்தினராக தென்மராட்சி கல்வி வலய அழகியல் பாட உதவிக் கல்விப் பணிப்பாளர் திருமதி விஜிதா ஆரியரட்ண கலந்துகொள்ளவுள்ளார். (ம-159)


## ஆக்கத்திறன் கண்காட்சி

யாழ்ப்பாணம், ஏப்.3

வடக்கு மாகாணக் கிராம அபிவிருத்தித் திணைக்கள அனுசரணையில் வேலணைப் பிரதேச செயலகப் பிரிவில் முன்னெடுத்த ஆடை வடிவமைத்தல், மனைப் பொருளியல் மற்றும் அழகுக்கலை டிப்ளோமாப் பயிற்சியாளர்களின் ஆக்கத்திறன் கண்காட்சி, வேலணைப் பிரதேச செயலக மாநாட்டு மண்டபத்தில் வேலணைப் பிரதேச செயலர் கைலாயபிள்ளை சிவகரன் தலைமையில் இன்று புதன்கிழமை மு.ப. 10 மணிக்கு இடம்பெறவுள்ளது. (ப-66)

# கைகலப்பில்

## உடைமைகள் தீக்கிரை!



கிளிநொச்சி, ஏப். 3

கிளிநொச்சி, தர்மபுரம் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட பகுதியில், இரு தரப்பினருக்கு இடையே இடம்பெற்ற கைகலப்புக் காரணமாக வீட்டின் உடைமைகள் தீக்கிரையாக்கப்பட்டுள்ள சம்பவம் இடம்பெற்றுள்ளது.

இரு வீட்டாருக்கு இடையில் ஏற்பட்ட வாய்த் தர்க்கமே கைகலப்பாகமாறி, வீட்டின் உடைமைகள் எரிக்கும் அளவுக்குச் சென்றுள்ளது என்று பொலிஸார் தங்களின் முதல்கட்ட விசாரணை களின் அடிப்படையில் தெரிவித்துள்ளனர். மேலதிக விசாரணைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. (ம-113)




சண்டிலிப்பாய் - சீரணி
திருவருள்மிகு சீரணி நாகபூசணி அம்பாள்
தேவஸ்தான சோபகிருது வருஷ
வருடாந்த மகோற்சவம் - 2024

அம்பாள் அடியார்களே!

| | |
|---|---|
| சோபகிருது வருஷம் | - பங்குனி மாதம் 25ம் நாள் (07-04-2024) ஞாயிற்றுக்கிழமை காலை 7.00 மணிக்கு விநாயகர் வழிபாட்டை தொடர்ந்து கிரியைகள் ஆரம்பமாகி முற்பகல் 11.00 மணிக்கு துவஜாரோகணம் (கொடியேற்றம்) நடைபெறும். |
| சோபகிருது வருஷம் | - பங்குனி மாதம் 29ம் நாள் (11-04-2024) வியாழக்கிழமை மாலை தெப்பத்திருவிழா |
| சோபகிருது வருஷம் | -பங்குனி மாதம் 30ம் நாள் (12-04-2024) வெள்ளிக்கிழமை மாலை கைலாச வாகனத்திருவிழா |
| குரோதிவருஷம் | - சித்திரை மாதம் 06ம் நாள் (19-04-2024) வெள்ளிக்கிழமை மாலை மாம்பழத் திருவிழா |
| குரோதிவருஷம் | - சித்திரை மாதம் 08ம் நாள் (21-04-2024) ஞாயிற்றுக்கிழமை மஞ்சத் திருவிழா |
| குரோதிவருஷம் | - சித்திரை மாதம் 09ம் நாள் (22-04-2024) திங்கட்கிழமை மாலை சப்பறத் திருவிழா |
| குரோதிவருஷம் | - சித்திரை மாதம் 10ம் நாள் (23-04-2024) செவ்வாய்க்கிழமை இரதோற்சவம். காலை 7.00 மணிக்கு விநாயகர் வழிபாடு. காலை 9.00 மணிக்கு வசந்த மண்டப தீபாராதனை முற்பகல் 11.00 மணிக்கு இரத ஆரோகணம், பிற்பகல் 2.00 மணிக்கு இரத அவரோகணம். |
| குரோதிவருஷம் | - சித்திரை மாதம் 11ம் நாள் (24-04-2024) புதன்கிழமை காலை 7.00 மணிக்கு அபிஷேகம் காலை 9.00 மணிக்கு வசந்த மண்டப தீபாராதனை முற்பகல் 11.00 மணிக்கு தீர்த்தோற்சவம், மாலை கொடியிறக்கம். |
| குரோதிவருஷம் | - சித்திரை மாதம் 13ம் நாள் (26-04-2024) வெள்ளிக்கிழமை பகல் சங்காபிஷேகம். மாலை வசந்தோற்சவம் |
| குரோதிவருஷம் | -சித்திரை மாதம் 17ம் நாள் (30-04-2024) செவ்வாய்க்கிழமை பகல் வைரவர் பொங்கல். மாலை தேரடிப்பொங்கல். |

**குறிப்பு:** தினந்தோறும் வசந்த மண்டப பூசை முற்பகல் 11.00 மணிக்கும் மாலை 6.00 மணிக்கும் நடைபெறும்.

உற்சவகால தற்காலிக கடைகள் 05.04.2024 எதிர்வரும் வெள்ளிக்கிழமை மாலை 4.00 மணிக்கு ஆலயவளாகத்தில் வழங்கப்படும். கடைகளை அமைக்க விரும்புவோர் அன்றைய தினமே பங்குபற்றி தமக்குரிய வாடகைப்பணத்தை முழுமையாகச் செலுத்தி பற்றுச்சீட்டை பெற்றுக்கொள்ளவும்.

இங்ஙனம்
சீரணி, சண்டிலிப்பாய். தேவஸ்தான தர்மகர்த்தா சபையினர், இந்து இளைஞர் மன்றம், சீரணி நாகபூசணி அம்பாள் தேவஸ்தானம்.



# மரண அறிவித்தல்

தோற்றம்
13 . 04 . 1933



மறைவு
01 . 04 . 2024

## முத்தையா விவேகானந்தன்

**(ஓய்வு பெற்ற பொலிஸ் சார்ஜன்ட். சமாதான நீதவான்)**

வரணி இயற்றாலையைப் பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும் கொண்ட முத்தையா விவேகானந்தன் அவர்கள் நேற்று முன்தினம் (01.04.2024) திங்கட்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற முத்தையா - பார்வதிப்பிள்ளை தம்பதியரின் மூத்தமகனும், காலஞ்சென்ற பொன்னையா - சிவக்கொழுந்து தம்பதியரின் மருமகனும், இராசம்மாவின் அன்புக் கணவரும், காலஞ்சென்ற தங்கம்மா மற்றும் இராசம்மா, அருளானந்தம் ஆகியோரின் சகோதரரும், இரவிச்சந்திரன் (சுவிஸ்), விமலச்சந்திரன் (கனடா), ஞானச்சந்திரன் (கனடா), அமுதாஞ்சலி (ஆசிரியை, வ/சைவப்பிரகாச மகளிர் கல்லூரி), உமா (ஆசிரியை, யா/கொடிகாமம் திருநாவுக்கரசு மத்திய கல்லூரி) ஆகியோரின் அன்புத் தந்தையும், பிறிந்தினி (சுவிஸ்), தாட்சாயினி (கனடா), சுதனா (கனடா), ஆனந்தகுமார் (சமுர்த்தி அபிவிருத்தி உத்தியோகத்தர் - வவுனியா), விஸ்ணுதாசன் (பொதுமுகாமையாளர்) ஆகியோரின் பாசமிகு மாமனாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (04.04.2024) வியாழக்கிழமை முற்பகல் 09.00 மணிக்கு அவரது இல்லத்தில் ஆரம்பமாகி, பூதவுடல் தகனக்கிரியைக்காக குடமியன் இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்:
**குடும்பத்தினர்.**
**077 655 5412**

(CR 42319) S-1


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நூல் அறிமுகம்

யாழிசைக் கவித் தடாகத்தின் ஏற்பாட்டில் கவிஞர் உடுவிலூர் கலாவின் 'அரும்புகள் உலகம்' நூல் அறிமுக விழாவும் கலைஞர் கௌரவிப்பு நிகழ்வும் சுன்னாகம் பொதுநூலக மண்டபத்தில் நாளை வியாழக்கிழமை பி.ப 1.30 மணிக்கு இடம்பெறவுள்ளது. நிகழ்வில் பிரதம விருந்தினராக உடுவில் கலாசார உத்தியோகத்தர் திருமதி பத்மராணி சிவஞானசுந்தரம், கௌரவ விருந்தினராக வலிகாமம் தெற்குப் பிரதேசசபையின் செயலர் திருமதி சாரதா உருத்திர சம்பவன், சிறப்பு விருந்தினர்களாக சித்த மருத்துவர் தியாகராஜா சுதர்மன், உடுவில் பிரதேச செயலக கலாசார உத்தியோகத்தர் திருமதி விஜிதா செல்வகுமார் ஆகியோர் கலந்து கொள்ளவுள் ளனர். (ம-66)

## காணி விற்பனைக்கு

K.K.S. றோட் மல்லாகம் (J-214) 2 1/4 பரப்பு (பழைய சோடா கொம்பனி ஒழுங்கை அருகில்) விற்பனைக்கு உண்டு. தரகர் தேவையில்லை.

**T.P: 077 753 2994**

## துயர் பகிர்கிறோம்

**அமரர் பொன்னையா தெண்டாயுதபாணி**



எமது கல்லூரி ஆசிரியர் திரு தெ.விஜேந்திரன் அவர்களின் பாசமிகு தந்தையார் அமரர் பொன்னையா தெண்டாயுதபாணி 01.04.2024 அன்று அமரத்துவம் அடைந்தமையையிட்டு அன்னாரின் ஆத்மா சாந்தியடைய பிரார்த்திப்பதோடு பிரிவால் துயருறும் குடும்பத்தாருக்கு ஆழ்ந்த அனுதாபங்களையும் தெரிவித்துக் கொள்கிறோம்.

***ஓம் சாந்தி சாந்தி சாந்தி***

**ஆசிரியர் நட்புறவுக்கழகம்**
**யா/மானிப்பாய் இந்துக்கல்லூரி.**

## சாவகச்சேரி பலநோக்கு கூட்டுறவுச்சங்கம் (வ-து)
## ஏலவிற்பனை

சங்கத்தலைமைக்காரியாலயத்தின் பாவனையில் இருந்து தற்போது பாவிக்க முடியாத பின்வரும் பொருட்கள் 16.04.2024ம் திகதி ஏலவிற்பனையில் விற்பனை செய்யப்படவுள்ளது. இப்பொருட்களை பார்வையிட விரும்புவோர் மீளளிக்கமுடியாத வைப்பு பணமாக ரூபா.200/= சங்க தலைமைக் காரியாலயத்தில் செலுத்தி சங்க கடமை நேரத்தில் (காலை 8.30 - பிற்பகல் 4.00மணிவரை) 03.04.2024ஆம் திகதிமுதல் 10.04.2024 ஆம் திகதிவரை பார்வையிடலாம். ஏலவிற்பனையில் பொருட்களைப் பெற்றுக் கொள்வோர் அன்றையதினம் பிற்பகல் 4.00 மணிக்கு முன் பொருட்களுக்கான முழுப்பணத்தையும் சங்கத்தில் செலுத்தி பொருட்களை அப்புறப்படுத்திக்கொள்ளவேண்டும்.

| பொருள் விபரம் | எண்ணிக்கை | பொருள் விபரம் | எண்ணிக்கை |
|---|---|---|---|
| 01.ரயர்-பெரிது | 10 | 08.பழைய லொறி பற்றரி | 2 |
| 02.ரயர்-சிறிது | 2 | 09.போட்டோ பிரதி மிசின் -1 | 1 |
| 03.பிறிச் | 3 | 10.போட்டோ பிரதி மிசின் - 2 | 1 |
| 04.தையல் மிசின் ஸராண்ட் | 2 | 11.தட்டச்சு இயந்திரம் | 1 |
| 05.தையல் மிசின் கால் | 1 | 12.சோலர் | 1 |
| 06.தையல் மிசின் | 1 | 13.UPS | 5 |
| 07.கிடாரம் - 20கி | 1 | | |

**ஏலவிற்பனை நடைபெறும் இடம்:-** சங்க தலைமைக்காரியாலயம்
**ஏலவிற்பனைக் காலம்:** 16.04.2024 செவ்வாய்க்கிழமை காலை 10.30மணி

பொதுமுகாமையாளர்
சாவகச்சேரி பலநோக்கு கூட்டுறவுச்சங்கம்
2024.04.02

## மன்னார் கிழக்கு பனை தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கம்(வ/து) வெளிவாரியாக
## 2024.03.27
## பதவி வெற்றிடம்

பதவி - கணக்காளர்
குறியீட்டு இலக்கம் - 104/10

**01. சம்பள அளவுத் திட்டம்** : 104/10 19.745.00 - 225*10 - 250*10 - 24.495.00
(கூ.ஊ.ஆணைக்குழு சுற்றுநிருபத்திற்கு அமைவாக இதர படிகளும் வழங்கப்படும்.)

**02. தகமைகள் :-** அ. கூட்டுறவு ஊழியர் 11 ஆவது சம்பளத்திட்டப் பதவியில் கணக்குப் பதிவாளர்/ கணக்கு/கணக்காய்வு எழுதுநர் பதவியில் ஆகக்குறைந்தது 02 ஆண்டு கால அனுபவம்/
கூட்டுறவு ஊழியர் 12 ஆவது சம்பளத்திட்டப் பதவியில் கணக்குப் பதிவாளர்/ கணக்கு/கணக்காய்வு எழுதுநர் பதவியில் ஆகக்குறைந்தது 04 ஆண்டு கால அனுபவம்

**அல்லது**

ஆ. இலங்கை தொழில்நுட்ப கல்லூரியின் கணக்கியலிலான டிப்ளோமா/ இதற்கு சமனான தகைமை/மாகாண கூட்டுறவுப் பயிற்சி நிறுவனத்தினால்/ தேசிய கூட்டுறவு அபிவிருத்தி நிறுவனத்தினால் (NICD) நடாத்தப்பட்ட கூட்டுறவு டிப்ளோமா பரீட்சையில் சித்தி.

**அல்லது**

இ. கூட்டுறவு ஊழியர் உயர் தராதரப்பத்திரப் பரீட்சையில் சித்தியுடன் கூட்டுறவு நிறுவனம் ஒன்றில் 02 ஆண்டுகால அனுபவம்/ அங்கீகரிக்கப்பட்ட வர்த்தக/கைத்தொழில் நிறுவனம் ஒன்றில் கணக்கியல்/கணக்காய்வு தொடர்பான பதவியொன்றில் 02 ஆண்டுகால அனுபவம்.

க.பொ.த.உயர்தரப்பரீட்சையில் கணக்கியல் உட்பட 03 பாடங்களுடனான சித்தியுடன் கூட்டுறவு நிறுவனம் ஒன்றில் 03 ஆண்டு கால அனுபவம்/ அங்கீகரிக்கப்பட்ட வர்த்தக/கைத்தொழில் நிறுவனமொன்றில் கணக்கியல்/கணக்காய்வு தொடர்பான பதவியொன்றில் 03 ஆண்டுகால அனுபவம்.

01. வயதெல்லை:- 18 - 45 வயதிற்கு உட்பட்டவராக இருத்தல் வேண்டும் கூட்டுறவு சேவையில் உள்ளோருக்கு வயதெல்லை கருத்தில் கொள்ளப்படமாட்டாது
02. பொது: தெரிவு செய்யப்படும் விண்ணப்பதாரி ரொக்கப் பிணையாக சம்பளத்தின் 5 மடங்கு செலுத்துவதுடன் ஆதனப்பிணையும் செலுத்த வேண்டும்.

சகல விபரங்களும் உள்ளடக்கப்பட்டதாக சுயமாக தயாரிக்கப்பட்ட விண்ணப்பத்துடன் சான்றிதழ்களின் நிழற்பிரதியுடன் "தலைவர், மன்னார் கிழக்கு பனை தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கம் (வ/து) இல. 54/4, அம்பாள்வீதி, எழுத்தூர், மன்னார்" என்னும் முகவரிக்கு பதிவுத்தபால் மூலம் எதிர்வரும் 17.04.2024ந் திகதிக்கு முன் கிடைக்கக்கூடியவாறு அனுப்பி வைத்தல் வேண்டும். கடித உறையின் இடது பக்க மேல் மூலையில் 'கணக்காளர் பதவி' என குறிப்பிடப்படல் வேண்டும். நேரடியாக ஏற்றுக் கொள்ளப்படமாட்டாது.

தலைவர்
மன்னார் கிழக்கு ப.தெ.வ.அ.கூ.சங்கம்,
இல. 54/4 அம்பாள் வீதி, எழுத்தூர்.
மன்னார்.
தொலைபேசி இல. **0232250105**

## ஆதன உரிமை மாற்ற அறிவித்தல்

**வலிகாமம் தென்மேற்கு பிரதேச சபை** :- பண்டத்தரிப்பு பட்டின உப அலுவலகம்
**விண்ணப்பதாரரின் பெயர்** :- மரியநாயகம் மைந்தன் இருதயதாஸ் பெண் வானதி
**சபை ஆதனவரி பதிவேட்டின்படி பெயர்** :- நீக்கிலாப்பிள்ளை சுவாம்பிள்ளை உ.கோ ஆறுமுகம்
**முகவரி -:** ஆதன இல-: 61. **வீதி-:** உந்துவத்தை பாலக்கட்டை வீதி. **வட்டாரம் -:** 02

வட்டாரம் 02. உந்துவத்தை பாலக்கட்டை வீதியில் அமைந்துள்ள உறுதியின் பிரகாரம் வட மாகாணம் யாழ்ப்பாணம் மாவட்டம் வலிகாமம் மேற்குப்பகுதி பண்டத்தரிப்பு கோவிற்பற்று சில்லாலை இறை "இன்மண்னோடை" எனும் பெயருள்ள நிலப்பரப்பு 2 விஸ்தீரணமுள்ள இவ் ஆதனம் சில்லாலை சுவாம்பிள்ளை அத்தனாசியார் கைம்பெண் மேரி யோசெபீன் ஆகியவரால் அவரது பேரப்பிள்ளையாகிய அன்ரன் பசீல் அத்தனாசியருக்கு பிரசித்த நொத்தாரிசு மு.க.சுப்பிரமணியம் அவர்களால் 9511ம் இலக்க 18.12.1972 திகதிய நன்கொடை உறுதி எழுதப்பட்டுள்ளது. பின்னர் பிரசித்த நொத்தாரிசு மு.க. சுப்பிரமணியம் அவர்களால் எழுதப்பட்ட 12009ம் இலக்க 01.03.1979ம் திகதிய உறுதி மூலம் லோறன்ஸ் யோசெப் பெனடிக்ற் அறுதி விற்கப்பட்டு அதன் பின் பிரசித்த நொத்தாரிசு பண்டிதர் ப.இராசகுரு அவர்களால் எழுதப்பட்ட 2819ம் இலக்க 14.12.2000ம் திகதிய உறுதி மூலம் அந்தோனிப்பிள்ளை யோசெப் மரியநாயகத்துக்கு அறுதி விற்கப்பட்டுள்ளது.

குறித்த இவ் ஆதனம் "பற்றிமாவாசா" சில்லாலை பண்டத்தரிப்பை சேர்ந்த அன்ரனிப்பிள்ளை யோசப் மரியநாயகம் என்பவரால் "2000ம் ஆண்டு ஐப்பசி மாதமளவில் லோறன்ஸ் யோசெப் பெனடிக்ற் கைம்பெண் மேரி மாக்கிறேற் என்பவரிடமிருந்து கொள்வனவு செய்திருந்தேனென்றும் குறித்த இவ்வாதனம் எனது கொள்வனவு ஆதனமும் ஆட்சியுமாகும்" என வெளிப்படுத்தி பிரசித்த நொத்தாரிசு இ.த. அன்ரன் பாலசிங்கம் அவர்களால் 7789ம் இலக்க 23.01.2021ம் திகதிய உறுதி எழுதப்பட்டு பின்னர் பிரசித்த நொத்தாரிசு இ.த. அன்ரன் பாலசிங்கம் அவர்களால் எழுதப்பட்ட 7863ம் இலக்க 27.06.2021ம் திகதிய உறுதி மூலம் அவரது மகனும் மருமகளுமாகிய மரியநாயகம் மைந்தன் இருதயதாஸ் பெண் வானதி ஆகியோருக்கு ஆதனஇடாப்பு 01இன் படி நிலப்பரப்பு 02 ஆதனஇடாப்பு 02இன் படி நிலப்பரப்பு 02 என மொத்தமாக நிலப்பரப்பு 04 நன்கொடை கொடுக்கப்பட்டுள்ளது.

**ஆதன விபரம்**
நில அளவையாளர் A.சந்தியாப்பிள்ளை அவர்களால் வரையப்பட்ட 3141ம் இலக்க 12.11.2021ம் திகதிய நில அளவைப்படத்தின் பிரகாரம் ""இன்மண்னோடை" நிலப்பரப்பு 02 குளி 09.80 எனவும் தஅகொண்ட இவ் ஆதனத்தின் எல்லைகள் பின்வருமாறு.

**வடக்கு** : உந்துவத்தை றோட்டும்
**கிழக்கு** : டேவிட் பெண் றீற்றாவுக்குரிய ஆதனம்
**தெற்கு** : யோன் கருணானந்தன்பெண் பத்திமாவுக்குரிய ஆதனம்
**மேற்கு** : அந்தோனிப்பிள்ளை யோசெப் மரியநாயகத்துக்குரிய ஆதனம்

மேற்குறித்த ஆதனத்தை மரியநாயகம் மைந்தன் இருதயதாஸ் பெண் வானதி என்ற பெயரில் சபையின் ஆதனப் பதிவேட்டில் பதிவு செய்வது தொடர்பாக ஏதேனும் ஆட்சேபனை தெரிவிப்பவர்கள் இன்றிலிருந்து 30 நாட்களுக்குள் சட்டபூர்வமான ஆவணங்களோடு எழுத்து மூலமாகவோ அல்லது நேரடியாகவோ வெளிநாட்டில் வசிப்பவர்களாக இருந்தால் இங்குள்ள உறவினர்கள் ஊடாகவோ ஆட்சேபனையை தெரிவிக்குமாறும் ஆட்சேபனை தெரிவிக்காத சந்தர்ப்பத்தில் விண்ணப்பதாரியின் பெயருக்கு சபையின் ஆதன பதிவேட்டில் பதிவு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என்பதையும் இந்த ஆதன பெயர் பதிவு செய்வதால் வரக்கூடிய எப்பொறுப்பிற்கும் வலிகாமம் தென்மேற்கு பிரதேச சபை பொறுப்பாளி அல்ல என்பதனையும் தெரிவித்துக்கொள்கின்றேன்.

செயலாளர்.
வலிகாமம் தென்மேற்கு பிரதேச சபை.
மானிப்பாய்.

**யாழ். வீரசிங்கம் மண்டபத்தில்**
**28.03.2023 முதல் சித்திரைப்புத்தாண்டு வரை**

# ஆடைகளின் சாம்ராஜ்யம்
# இந்தியன் செலக்ஷனின்
## சித்திரைப் புத்தாண்டு
# ஆடைக் கொண்டாட்டம்



திருமணப்பட்டுச் சாறிகள், கொட்டன் சாறிகள், சல்வார்கள், சல்வார் துணிகள், டொப் வகைகள், சேட், ரீ சேட், பாட்டி புரொக், லெஹங்கா மற்றும் ஏராளமான ஆடைத் தெரிவுகளைப் பெற்றுக்கொள்ள இன்றே முந்திக்கொள்ளுங்கள்

## விசேட விலைக் கழிவு

ரெடிமேற் கொட்டன் சல்வார்
ரெடிமேற் நெற் சல்வார்
**500/=**

**28.03.2024 முதல்**
**சித்திரைப் புத்தாண்டு வரை**
**(ஞாயிற்றுக்கிழமைகளிலும் திறந்திருக்கும்)**

# இந்தியன் செலக்ஷன்

**யாழ். வீரசிங்கம் மண்டபம் -யாழ்ப்பாணம்**
**அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## முருகன்...

ராஜீவ்காந்தி கொலை வழக்கில் கைது செய்யப்பட்ட ஏழுபேரும், 2022ஆம் ஆண்டு நவம்பர் மாதம் நீதிமன்றத்தின் தற்றுணிவின் அடிப்படையில் விடுவிக்கப்பட்டிருந்தனர். அவர்களில் இந்தியாவைச் சேர்ந்த மூவரும் தங்களின் குடும்பத்தினருடன் இணைக்கப்பட்டுள்ள நிலையில், இலங்கையைச் சேர்ந்தவர்களான சாந்தன், முருகன், ரொபேர்ட் பயஸ் மற்றும் ஜெயக்குமார் ஆகிய நால்வரும் சிறைச்சாலையிலிருந்து சிறப்பு முகாமுக்கு மாற்றப்பட்டனர்.

சிறைச்சாலையை விடவும் கொடுமையான சிறப்பு முகாமில், நோயுற்ற சாந்தன் கடந்த சில வாரங்களுக்கு முன்னர் உயிரிழந்தார். இதையடுத்து எஞ்சிய மூவரையுமாவது விடுவிக்கவேண்டும் என்று இந்திய அரசுக்கு அழுத்தங்கள் குவிந்தன. இவ்வாறானதொரு பின்னணியிலேயே, இவர்கள் மூவரும் இன்று இலங்கைக்கு அனுப்பப்படுகின்றனர்.

தமிழ்நாட்டிலிருந்து வெளிநாடுகளில் உள்ள தங்களின் குடும்பத்தினருடன் இணைந்து கொள்வதற்காக சகல நாடுகளுக்குமான கடவுச்சீட்டுக்களை வழங்குமாறு அவர்கள் கோரியிருந்த நிலையில், அதனை வழங்குவதில் சில சட்டச் சிக்கல்கள் ஏற்பட்டிருந்தன. இதையடுத்து அவர்கள் இலங்கை திரும்புவதற்கான நடவடிக்கைகள் சென்னை உயர் நீதிமன்றத்தின் தலையீட்டில் முன்னெடுக்கப்பட்டன. இதையடுத்து மூவரும் இந்தியாவை விட்டு வெளியேறுவதற்கான ஆவணங்கள் கிடைக்கப்பெற்றதை அடுத்து பயணச்சீட்டுகள் பெறப்பட்டு இறுதி ஏற்பாடுகள் பூர்த்தி செய்யப்பட்டுள்ளன.

திருச்சி சிறப்பு முகாமில் இருந்து முருகன், ரொபேர்ட் பயஸ், ஜெயக்குமார் ஆகிய மூவரும் நேற்று செவ்வாய்க்கிழமை இரவு 10 மணிக்கு சென்னை விமான நிலையத்துக்கு அழைத்துச் செல்லப்பட்டுள்ளனர். இன்று புதன்கிழமை மு.ப. 10 மணிக்கு சென்னையில் இருந்து கொழும்பு புறப்படும் சிறிலங்கன் எயார் லைன்ஸ் பயணிகள் விமானத்தின் மூலம் அவர்கள் மூவரும் இலங்கை திரும்ப உள்ளனர் என்பது குறிப்பிடத்தக்கது. (அ-ம-100)

## குடாநாட்டுப்...

பட்டுள்ளன என்று யாழ்ப்பாணம் மாவட்ட பிரதிப்பொலிஸ்மா அதிபர் காளிங்க ஜெயசிங்க தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:-

யாழ்ப்பாணக் குடாநாட்டின் போக்குவரத்தைச் சீர்செய்வது தொடர்பில் பல்வேறு செயற்றிட்டங்கள் பரிசீலிக்கப்பட்டு இன்று முதல் நடைமுறைப்படுத்தப்படவுள்ளன.

யாழ்ப்பாணத்தில் தலைக்கவசம் இல்லாமல் வாகனங்களைச் செலுத்துகின்றவர்கள், திறன்பேசிகள் மூலம் அலைபேசிகளைக் கதைத்தபடி சாரத்தியத்தில் ஈடுபடுகின்றவர்கள், பாதசாரிகள் கடவைகள் இருக்கத்தக்கதாக அதற்கு அருகாக வீதியைக் கடக்கின்றவர்கள், போக்குவரத்து ஒழுக்க மீறல்களில் ஈடுபடுகின்றவர்கள் மீது இன்றுமுதல் சட்டம் கடுமையாக நடை முறைப்படுத் தப்படும். அத்துடன், பாடசாலைகள், கல்வி நிலையங்கள் மற்றும் வணிக வளாகங்களுக்கு அருகாகவும் நெரிசல் மிகுந்த இடங்களிலும் கூடுதலான பொலிஸார் களமிறக்கப்பட்டு வீதிப் பாதுகாப்பு நடவடிக்கைகள் இன்றுமுதல் பலப்படுத்தப்படுகின்றன.

கடந்த வருடம் மேற்கொள்ளப்பட்ட போக்குவரத்து விழிப்புணர்வுத் திட்டத்தை இந்த வருடமும் தொடர்வதற்குத் தீர்மானிக்கப்பட்டுள்ளது. பொலிஸ் நிலையங்களுக்கும் இது தொடர்பில் அறிவிக்கப்பட்டுள்ளது. எனவே, பொதுமக்கள் சீரானதும் ஆரோக்கியமானதுமான போக்குவரத்தை மேற்கொண்டு, தேவையற்ற அசௌகரியங்களைத் தவிர்க்குமாறு அறிவுறுத்தப்படுகின்றனர் - என்றார். (அ-ம-26)

## கச்சதீவை...

தமிழகத்தில் நேற்று நடைபெற்ற செய்தியாளர் சந்திப்பிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார். அண்ணாமலை மேலும் தெரிவித்ததாவது:-

"இந்தியாவிடம் இல்லாத நிலப்பரப்பு இல்லை. எனினும் கச்சதீவு எமக்கு வேண்டும். கச்சதீவு எதற்காக வேண்டும் என்றால், கச்சதீவு இருந்தால் மட்டுமே தமிழக மீனவர்களின் பிரச்சினையைத் தீர்க்கமுடியும். மூன்றுமுறை இலங்கை சென்றுள்ளேன். தனிப்பட்ட முறையில் இலங்கை அதிகாரிகள், அரசியல் கட்சிகளைச் சந்தித்துப் பேசியுள்ளேன். இந்தச் சந்திப்புக்குப் பிறகு கச்சதீவுப் பிரச்சினையில் தீர்வு கிடைக்க சில முடிவுகளுக்கு வந்துள்ளோம். மூன்று தீர்வுத் திட்டங்கள் தொடர்பில் பரிசீலிக்கின்றோம். கச்சதீவில் தினமும் பத்தாயிரம் மீனவர்கள் மீன்பிடிக்க 'லைசென்ஸ்' பெறுவது அல்லது கச்சதீவை தமிழக மீனவர்கள் பயன்படுத்துவதற்கு அனுமதி பெறுவது அல்லது கச்சதீவை திரும்பக் கேட்பது என்பனவே அந்த மூன்று வாய்ப்புகளுமாகும்" - என்றார். (அ-ம)

## அண்ணாமலைக்கு...

மாவட்ட மீனவர்கள் குற்றஞ்சாட்டியுள்ளனர்.

யாழ்ப்பாண மாவட்டக் கடற்றொழிலாளர் கூட்டுறவுச் சங்கங்களின் சமாசத்தில் நேற்றுமுன்தினம் இடம்பெற்ற செய்தியாளர் சந்திப்பிலேயே அவர்கள் இவ்வாறு தெரிவித்துள்ளனர்.

மீனவர்கள் மேலும் தெரிவித்ததாவது:-

கச்சதீவு எமது சொத்து. அதை இந்தியா, இலங்கைக்கு தாரைவார்த்திருக்கக்கூடாது என்று பா.ஜ.க.வின் மாநிலத் தலைவர் அண்ணாமலை தெரிவிப்பதை ஏற்றுக்கொள்ளமுடியாது. அண்ணாமலைக்கு தற்போது தேர்தல் காய்ச்சல் ஆரம்பித்த நிலையில் தமிழக மீனவர்களின் வாக்குகளை அபகரித்துக்கொள்ளும் கபட நோக்கத்துடன், தான் பேசுவது என்ன என்று தெரியாமல் புலம்ப ஆரம்பித்துவிட்டார். 1974 க்கும் முன்னர் இலங்கை மீனவர்கள் இந்தியாவில் கன்னியாகுமரி, நாகப்பட்டினம் ஆகிய பிரதேசங்களில் மீன்பிடி நடவடிக்கைகளில் ஈடுபட்டு வந்தனர். இதன் காரணமாக அப்போதைய இந்திய அரசாங்கம் இலங்கை மீனவர்களைக் கட்டுப்படுத்தும் முகமாக ஒப்பந்தம் என்ற போர்வையில் இதை வலிந்து மேற்கொண்டனர். ஆனால், அண்ணாமலை காங்கிரஸ் அரசாங்கம் கச்சதீவை இலங்கைக்குத் தாரைவார்த்துவிட்டதாகக் கூறி வருகிறார் - என்றனர். (அ-ம-27)

## சுகாதாரத்...

டும் உள்ளிட்ட கோரிக்கைகளை வலியுறுத்தி பொதுச் சுகாதாரப் பரிசோதகர்கள், இரசாயன ஆய்வுகூடப் பணியாளர்கள், மருந்தாளர்கள், கதிரியக்கத் தொழில்நுட்பவியலாளர்கள் மற்றும் தாதியர்களை உள்ளடக்கிய தொழிற்சங்கங்கள் அறிவித்திருந்த பணிப்புறக்கணிப்புப் போராட்டம் வடக்கு மாகாணத்தில், யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனை, கிளிநொச்சி மருத்துவமனை, வவுனியா [illegible] ளிட்ட பல [illegible] லாக நேற்று இடம்பெற்றது.

'சுகாதாரத்துறையின் ஒரு பகுதியினருக்கு மாத்திரம் வழங்கப்பட்ட கொடுப்பனவு அனைவருக்கும் வழங்கப்படவேண்டும், அத்துடன் முறையான பதவி உயர்வுகள் வழங்கப்படவில்லை. இதே வேளை - நிலுவைக்கொடுப்பனவுகள், சீருடைக் கொடுப்பனவுகள் போன்றன நீண்டகாலமாக வழங்கப்படவில்லை, இந்த விடயங்கள் தொடர்பாகத் தொடர்ச்சியான பேச்சுகள் முன்னெடுக்கப்படுகின்றபோதும் அதனால் எந்தப் பயனும் கிடைக்காத நிலைமையே நீடிக்கின்றது. எனவே எமது கோரிக்கைக்கு அரசாங்கம் செவிமடுக்காவிடில் நாளைய தினத்திலிருந்து (இன்று) தொடர் பணிப்புறக்கணிப்புப்போராட்டத்தை முன்னெடுப்பதற்குத் தயாராகியுள்ளோம்' என்று போராட்டத்தில் ஈடுபட்டவர்கள் தெரிவித்தனர். (அ-ம-13-110-66-20)

## ஈஸ்டர்...

நாடாளுமன்றத்தில் நேற்று உரையாற்றும்போது அவர் மேலும் தெரிவித்ததாவது:-

"உயிர்த்த ஞாயிறுத் தாக்குதல் தொடர்பில் நான் நேற்று (நேற்றுமுன்தினம்) கேட்ட கேள்விக்கு இன்னும் பதில் கிடைக்காத காரணத்தினாலும், இது விடயத்தில் அரசு நீதி வழங்காத காரணத்தினாலும் எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தலில் மக்களால் ஜனாதிபதியாகத் தெரிவு செய்யப்பட்டால், உயிர்த்த ஞாயிறுத் தாக்குதலை நடத்தியவர்களைத் தேடி அறிவதற்கு உரிய நடவடிக்கை எடுக்கப்படும்.

இதன்பிரகாரம், புதிய ஜனாதிபதியாகத் தெரிவுசெய்யப்பட்டு இரு மாதங்களுக்குள் 1948ஆம் ஆண்டின் 17ஆம் இலக்க விசாரணை ஆணைக்குழுச் சட்டத்தின் கீழ், 7 முதல் 9 தேசிய மற்றும் சர்வதேச அங்கத்தவர்களைக் கொண்ட ஓர் ஆணைக்குழு நியமிக்கப்படும்.

இதன்மூலம் கடந்தகால மற்றும் தற்போதைய காலகட்டத்தின் முழுப் பாதுகாப்பு வேலைத்திட்டம் குறித்து ஆய்வு செய்து, எந்தவொரு நிறுவனத்திலும் எந்தவொரு நபரிடமும் எவ்விதத் தடையுமின்றி வாக்குமூலங்களைப் பெற்றுக்கொள்ள இவ் வாணைக்குழுவுக்கு அதிகாரம் வழங்கப்படும். ஆணைக்குழுவை நிறுவிய 6 வாரங்களுக்குள் அதனுடன் இணைந்து பணியாற்ற ஸ்கொட்லாந்துயாட், எப்.பி.ஐ. உள்ளிட்ட வெளிநாட்டுப் புலனாய்வு மற்றும் பாதுகாப்புச் சேவைகள், தேசியப் புலனாய்வுத் துறை மற்றும் பாதுகாப்புத் தரப்புகளைக் கொண்ட நிரந்தர விசாரணை அலுவலகம் நிறுவப்படும். ஆணைக்குழுவின் பரிந்துரைகள் மற்றும் உத்தரவுகளுக்கு உட்பட்டு இலங்கையின் சட்டங்களின் கீழ் குற்றப்பத்திரிகைகளைச் சமர்ப்பிக்க அல்லது தேவையான நடவடிக்கைகளை [illegible] சட்டமா அதிபருக்கு கட்டாயமாக்கப்படும்.

1948 ஆம் ஆண்டின் 17 ஆம் இலக்க விசாரணை ஆணைக்குழுச் சட்டத்தின் 7 (2) அல்லது பிரிவு 24 திருத்தப்படும். மேற்கண்ட குற்றங்களில் குற்றம் சாட்டப்பட்ட நபர்கள் மீது தீர்ப்பு வழங்க நிரந்தர உயர்நீதிமன்றம் நிறுவப்படவேண்டும். இதற்காக 1978 ஆம் ஆண்டு 2 ஆம் இலக்க நீதித்துறைக் கட்டமைப்புச் சட்டத்தின் 12 ஆவது பிரிவைத் திருத்த நடவடிக்கை எடுக்கப்படும். சட்டமா அதிபரை சாராத அரச தரப்பு வழக்கறிஞர் அலுவலகத்தை நிறுவுவதற்கான சட்டவரைவு கொண்டுவரப்படும்" - என்றார். (அ-ம-44)

## பொலிஸாருக்கு...

பட்டமை தொடர்பில் கல்லூரி மாணவர்கள், அதிபர் மற்றும் ஆசிரியர்கள் விசாரணைக்கு உட்படுத்தப்பட்டமை தொடர்பாகத் தெல்லிப்பழைப் பொலிஸாருக்கு எதிராக இலங்கை ஆசிரியர் சங்கத்தினர் யாழ்ப்பாணத்தில் அமைந்துள்ள இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுவின் பிராந்திய அலுவலகத்தில் முறைப்பாடு பதிவு செய்துள்ளனர்.

இலங்கை ஆசிரியர் சங்கத்தின் பிரதிநிதிகள் நேற்றுச் செவ்வாய்க்கிழமை குறித்த முறைப்பாட்டினைப் பதிவு செய்தனர்.

இதேவேளை - முறைப்பாட்டின் பிரகாரம் சம்பவம் தொடர்பில் இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழு விசாரணைகளை ஆரம்பித்துள்ளது. (அ-ம-26-66)

## கிணற்றிலிருந்து...

மேலதிக விசாரணைகளைப் பொலிஸார் மேற்கொண்டனர். (அ-ம-110)

**வீடு விற்பனைக்கு**
யாழ்ப்பாணம், வேம்படி வீதியில் வீடு மற்றும் கடை விற்பனைக்கு உண்டு.
தொ.பே: 077 160 6036
(CS 2024/0068) S-1

## மரண அறிவித்தல்

தோற்றம் 02 . 05 . 1959



மறைவு 01 . 04 . 2024

**குகராசா மனோகரதேவி**

கொக்குவில் கிழக்கை பிறப்பிடமாகவும், கொக்குவில் மேற்கை வதிவிடமாகவும் கொண்ட குகராசா மனோகரதேவி அவர்கள் நேற்று முன்தினம் (01.04.2024) திங்கட்கிழமை அன்று இறைபதமடைந்துவிட்டார்.

அன்னார் கந்தையா குகராசாவின் அன்பு மனைவியும், காலஞ்சென்ற கைலாசபிள்ளை - கனகாம்பிகை தம்பதியரின் அன்பு மகளும், காலஞ்சென்ற கந்தையா - செல்லம் தம்பதியரின் மருமகளும், கருணாகரன், மனோகரன், கருணாதேவி, வசீகரன், லாலாகரன், கௌசலாதேவி ஆகியோரின் பாசமிகு சகோதரியும், சிவராசா, ஜெயமாலா, சோபனா, செல்வமலர், பாலச்சந்திரன் மற்றும் காலஞ்சென்ற சுந்தரலிங்கம், மகாலட்சுமி, தியாகலிங்கம், ஜெயசீலன், அனாமரியா ஆகியோரின் மைத்துனியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரிகைகள் பற்றிய விபரம் பின்னர் அறிவிக்கப்படும்.

தகவல்:
க.குகராசா (021 222 0701, 077 881 8862)
கை.வசீகரன் (077 617 1519)

(CS) S-1

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மரண அறிவித்தல்

தோற்றம்
23 . 08 . 1942



மறைவு
01 . 04 . 2024

## சிவானந்தராஜா பூமணி (கிளி)

உரும்பிராயைப் பிறப்பிடமாகவும், கொழும்பு வெள்ளவத்தையில் வசித்தவரும், தற்போது உரும்பிராய் கிழக்கில் வாழ்ந்து வந்தவருமான சிவானந்தராஜா பூமணி அவர்கள் நேற்றுமுன்தினம் (01.04.2024) திங்கட்கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சங்கரப்பிள்ளை - சிதம்பரம் தம்பதியரின் அன்பு மகளும், காலஞ்சென்றவர்களான பஞ்சநாதன் - சிவபாக்கியம் தம்பதியரின் அன்பு மருமகளும், காலஞ்சென்ற சிவானந்தராஜா அவர்களின் அன்பு மனைவியும், வள்ளி, அபிராமி, முருகானந்தா ஆகியோரின் பாசமிகு தாயாரும், மோகன், பிரபாகரன், சிவதர்ஷினி ஆகியோரின் அன்பு மாமியாரும், காலஞ்சென்றவர்களான தவமணி, நல்லம்மா, கனகலிங்கம், குணமணி, சிவபாக்கியம் ஆகியோரின் அன்புச் சகோதரியும், காலஞ்சென்ற செல்வச்சந்திரன் மற்றும் பத்மலோசினி ஆகியோரின் அன்பு மைத்துனரும், ஹரிஸ், திவ்யன், சாய்லவன், அய்ஷானி, விகாசினி ஆகியோரின் பாசமிகு பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (04.04.2024) வியாழக்கிழமை முற்பகல் 09.00 மணியளவில் உரும்பிராய் கிழக்கில் அமைந்துள்ள அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைகளுக்காக உரும்பிராய் இளங்காடு இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும். இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**சிவன் வீதி,**
**உரும்பிராய் கிழக்கு,**
**உரும்பிராய்.**

**தகவல்:**
**குடும்பத்தினர்.**
**076 007 0575**

(CS 54812) S-1

---


## காணி விற்பனைக்கு

**நல்லூரில் 5.7 பரப்பு காணி விற்பனைக்கு உண்டு. மற்றும் கொழும்பு வெள்ளவத்தை, தெஹிவளையில் Apartment தனி வீடுகள் விற்பனைக்கு உண்டு.**

(CR42138) J-1

தொடர்பு:- **077 968 1340**



## சிறுநீரகம் தேவை

AB- இரத்த வகையை கொண்ட 37வயதுடைய ஒருவருக்கு சிறுநீரகம் தேவை.

→ (O-, A-, B-, AB- குருதி வகை கொண்டவர்கள் வழங்கலாம்)

தொடர்புகளுக்கு:


**077 586 2144, 077 175 7594**


---

# மரண அறிவித்தல்

## இராஜநாயகம் ஸ்ரீ மகேஸ்வரன்

**(ஓய்வுபெற்ற பொலிஸ் உத்தியோகத்தர் Sony Trade Center- சுன்னாகம், பிள்ளையார் அப்பள கம்பனி உரிமையாளர்)**



**தோற்றம்** 29.09.1949 **மறைவு** 02.04.2024

தொண்டமானாறை பிறப்பிடமாகவும், சுன்னாகத்தை வசிப்பிடமாகவும் கொண்ட இராஜநாயகம் ஸ்ரீமகேஸ்வரன் அவர்கள் நேற்று (02.04.2024) செவ்வாய்க்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான இராஜ நாயகம் - மகேஸ்வரி தம்பதியரின் அன்பு மகனும், காலஞ்சென்றவர்களான சிதம்பரப் பிள்ளை - சோதிமலர் (மாவிட்டபுரம்) தம்பதி யரின் அன்பு மருமகனும், மதிவதனியின் அன்புக் கணவரும், செந்தூரன் (அபிவிருத்தி உத்தியோகத்தர்- பிரதேச செயலகம், மாந்தை கிழக்கு), குறிஞ்சிக்குமரன் (Sony Trade Center உரிமையாளர், சுன்னாகம்), சாரதா ஆகி யோரின் அன்புத் தந்தையும், கஜனி (அபி விருத்தி உத்தியோகத்தர், பிரதேச செயலகம் வேலணை), ஜெசினேசன் ஆகியோரின் அன்பு மாமனாரும், அபூர்விகாவின் அன்புப் பேரனும், காலஞ்சென்ற ஞானேஸ்வரி மற்றும் புவனேஸ்வரி, காலஞ்சென்ற இராஜேஸ்வரன் ஆகியோரின் அன்புச் சகோதரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (03.04.2024) புதன்கிழமை நண்பகல் 12.00 மணியளவில் அவரின் இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக கொத்தியாலடி இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்ளப்படுகின்றீர்கள்.


**52, கந்தையா வீதி,**
**சுன்னாகம்.**

**தகவல்:குடும்பத்தினர்.**
**077 8919 221**
**077 0440 570**

(CS 54616) A-1

---

# மரண அறிவித்தல்



**தோற்றம்** 08.09.1953 **மறைவு** 01.04.2024

## லிங்கசாமி அன்னலட்சுமி

**(லட்சுமி ஸ்டோர்ஸ் உரிமையாளர் கதுவெல)**

கைதடியைப் பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும் கொண்ட லிங்கசாமி அன்னலட்சுமி அவர்கள் நேற்று முன்தினம் (01.04.2024) திங்கட்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சின்னத்தம்பி - அன்னம்மா தம்பதியரின் அன்பு மகளும், காலஞ்சென்றவர்களான தம்பு - அன்னப்பிள்ளை தம்பதியரின் பாசமிகு மருமகளும், லிங்கசாமியின் அன்பு மனைவியும், சுப்பிரமணியம், கந்தசாமி (லண்டன்) ஆகியோரின் அன்புச் சகோதரியும், தியாகராஜா, இளையதம்பி, குணரத்தினம் ஆகியோரின் அன்பு மைத்துனியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (03.04.2024) புதன்கிழமை காலை 07.30 மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக கைதடி கிழக்கு ஊற்றல் இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**கைதடி கிழக்கு,**
**கைதடி.**
**(லட்சுமி இல்லம்)**

**தகவல்:**
**நந்தகுமார்**
**குடும்பம்**
**077 553 2814**

(CS 54814 ) S-1



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிக்கேஷன் (பிறைவேற்) லிமிட்ரெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361 ஆம் இலக்கத்தில் உள்ள அவர்களது பணிமனையில் 03.04.2024 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.